உ

# அருள் ஒளி



PUPLIC LIBRARY

101


திருக்கோணேஸ்வரம் கும்பாபிஷேகச் சிறப்புமலர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


தெல்லிப்பழை, இலங்கை

2015

# துர்க்காதேவி வீட்டுத்திட்ட திறப்பு விழா



ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்



நல்லை ஆதீன முதல்வர் இல்லத்தைத் திறந்து வைத்தார்.



பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி சே. ஆனந்தராசா அவர்கள்
நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைத்தார்.



உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்

**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

**தை மாத மலர்**
**2015**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.**

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


# கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை

ஈழத்து இந்து சமய வரலாற்றில் திருக்கோணேஸ்வரத் திருத்தலம் முக்கிய இடம் பெறுவதை அனைவரும் அறிவர். சைவத்தமிழர்களின் தலையாய சொத்துக்களில் திருக்கோணேஸ்வரம் உன்னத இடம் வகிக்கிறது. இயற்கை எழில் கொஞ்சும் அழகுடன் மிகவும் பிரசித்தமான இத்திருத்தலம் போர்ச்சூழலில் மிகவும் பாதிப்பைச் சந்தித்தது. சில காலம் பக்தர்கள் சென்று வழிபாடு செய்யமுடியாத நிலையில் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இத்திருக்கோயிலை ஆரம்பத்தில் கடல் கொண்டது என வரலாறு கூறுகிறது. பின் தமிழ்வேந்தன் குளக்கோட்டன் பாரிய திருப்பணிகள் செய்து பெருங்கோயிலாக இக்கோயில் விளங்கியதென வரலாறு கூறுகிறது. அந்நியர் ஆட்சியில் முதல் அழிக்கப்பட்ட ஆலயங்கள் வரிசையில் கோணேஸ்வரமும் இலக்கானது. மீண்டும் இத்திருக்கோயிலை ஓரளவேனும் கட்டி வளர்ப்பதற்கு எம் முன்னோர்கள் எடுத்த முயற்சி மறக்கமுடியாது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பிரித்தானிய கடற்படை சூழ்ந்திருந்த சூழ்நிலையில் இக்கோயிலைக் கட்டுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின் துறைமுகப் பட்டணமாகிய திருகோணமலையின் மீது ஆட்சியாளர்கள் தம் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

கோணேஸ்வரம் செல்லும் பாதையில் அரச செயலகங்களும், படைகளின் தளங்களும் உருவாக்கப்பட்டன. பல சிங்கள குடும்பங்கள் கோயில் செல்லும் பாதையில் குடியேறினர். கோயிலுக்குரிய மடங்கள் கூட பொதுமக்கள் பயன்படுத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கோணேஸ்வரம் சென்று வழிபாடு செய்யும் பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. சைவ மக்கள் மிகவும் துயருற்றனர். தப்போது திருக்கோணேஸ்வர திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி மீளவும் திருக்கோயில் புத்துயிர் பெற்றுள்ளது.

ஆலய அறங்காவலர்கள் பல்வேறு திருப்பணிகளை நிறைவேற்றி இம்மாதம் மஹா கும்பாபிஷேகத்தை நன்முறையில் நிறைவேற்றி உள்ளார்கள். கும்பாபிஷேகம் தொடர்பாக சிறப்பு மலரையும் வெளியிட்டு உள்ளார்கள். இருபத்திரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பு திருக்கோணேஸ்வரப் பெருமானது கும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது. கோணேஸ்வரர் ஆலயதிருப்பணியில் அக்கறை கொண்டு உழைத்த அறங்காவலர்களுக்கும் கலைஞர்களுக்கும் சைவ உலகம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

இக்கோவில் சூழல் முற்றுமுழுதாக கோவில் அறங்காவலர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். கோவிலுக்குச் செல்லும் பிரதான பாதை சீரிய பாதையாக அமைக்கப்படவேண்டும். பாரம்பரியமான சைவத் தமிழர்களின் இப்புண்ணிய சொத்தைப் பாதுப்பதற்கு அனைவரும் அக்கறை கொள்வோமாக.

**- ஆசிரியர்**

# பன்னாலை தெல்லிப்பழை
# திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபை
# பவளவிழா - 2014
# முதன்மை விருந்தினர் உரை

**நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள்**

குருர் ப்ரம்மா....

தலைவரவர்களே, எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் அவர்களே, வணக்கத்திற்குரிய சிவாச்சாரியர்களே, எனதருமைத் தம்பி ஆறு.திருமுருகன் அவர்களே, சிறப்பு விருந் தினர்களே, கௌரவ விருந்தினர்களே, பன்னாலை – தெல்லிப்பளை வாழ் என் இனிய சகோதர சகோதரிகளே, குழந்தை களே!

என்னை அழைத்தமைக்கு நன்றி! உங்கள் கூட்டுப் பிரார்த்தனைச் சபைக்கும் எனக்கும் ஒரே வயது தான் ஆகின்றது. நான் பிறந்து இரண்டு மாதங்களில்தான் உங்கள் சபை திருவெம்பாவை பாட ஆரம்பித்தது.

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து**
**போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙண்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே**
**ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்**

என்று தொடங்கி பன்னாலை வீதிகள் வாய்க்கேட்ட அந்தக் குரல் இன்றும் உங்கள் ஊடாக ஒலித்துக் கொண்டிருக்கின்ற தென்றால் என்னே என்னே உங்கள் சிவ அன்பு என்று பாராட்ட வேண்டியுள்ளது. நான் கூட மாணவனாக இருந்த காலத்தில் காலை மூன்றரை மணிக்கு எழும்பி அவசர அவசரமாக ஜில்லென்ற குளிர் நீரில் குளித்துவிட்டு பனிகொட்டும் மார்கழி மாத அதிகாலையில் கோயிலுக்கு என் நண்பர் களுடன் நடை நடந்து போய் காலை நான்கரை மணிக்கெல்லாம் திருப்பள்ளி யெழுச்சி பாடியவன்தான்.

திருவெம்பாவை என்பது இளம் பெண்கள் காலையில் எழுந்து ஒருவர் மற்றவரை எழுப்பி எல்லோரும் சேர்ந்து சென்று நீராடி இறைதரிசனம் பெறுவது போல் அமைந்திருந்தாலும் அதன் உள்ளர்த்தம் எம் எல்லோரையும் சுட்டிக் காட்டுவதாகவே அமைந்திருக்கின்றது. எங்களில் எத்த னையோ போர் எமது நாளாந்த வேலை களுள் அமிழ்ந்திருந்து இறைவனை நினைத்துப் பார்க்கமுடியாத நிலையில் இருக்கின்றோம். மற்றவர்கள் இறைவனைப் பற்றிக் கூறிப்பாட, நாம் மட்டும் உலக காரி யங்களில் முழுமையாக ஈடுபட்டுள்ளோம். எம்மை எல்லாம் அந்த உலகாய வேலை களில் இருந்து விடுபட்டு சற்றே நேரம் இறை யெண்ணத்தில் திளைத் திருக்க அழைப்பது போல் திருவெம்பாவை அமைந்திருக் கின்றது. மாணிக்கவாசகர் முதன் மந்திரி யாகப் பல கடமைகளில் ஈடுபட்டிருப்பினும் இறை எண்ணம் அவரை முற்றிலும் தன்பால் இழுத்துவிட்டது. ஆனால் தம்மைப் போல் இல்லாவிடினும் சற்று நேரமாவது இறை வனை நினைக்க அழைப்பதாகப் பாடல்கள் அமைகின்றன.

"போதாரமளிக்கே நேசமும் வைத்த னையோ" என்று கேட்கும்போது அதாவது நீ படுத்திருக்கும் உன் படுக்கையறைக் கட்டிலுக்குக் கூடிய அன்பைச் செலுத்துகின்றாயா என்று கேட்கும்போது உலக காரியங்களுக்குக் கூடிய மதிப்பை அளிக்கின்றாயே இறைவனை நினைக்க மாட்டாயா என்று எங்களிடம் கேட்பது போல் இருக்கின்றது. இன்னொரு இடத்தில் சொல்லப்படுகிறது "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" என்று. இது எம் எல்லோருக்கும் பொருந்தும். நாங்கள் ஒரு நாளில் எவ்வளவு நேரத்தை வீணாக்குகின்றோம்? அவமே காலத்தைப் போக்குகின்றோம்? இதைத்தான் மணி வாசகர் திருவண்ணாமலையின் இளம் கன்னிகைப் பெண்கள் ஊடாக எமக்கு அறிவிக்கின்றார்.

இன்னோர் இடத்தில் "இன்னந்துயிலுதியோ" என்று கேட்கின்றார். எம்மை எல்லாம் விழித்தெழுந்து இறைவன் வழி செல்ல, இறைவனை நினைக்க, இறைவனோடு மனதளவில் உறவாட வைக்கவே திருவெம்பாவையை அருளினார் மணி வாசகப் பெருமான்.

திருவெம்பாவையானது பாடல்களாக யாத்துத் தந்திருப்பதாலும் கூட்டாகச் சேர்ந்து அப்பாடல்களைப் பாட வசதி அளித்திருப்பதாலும் இவற்றைப் பாடி எமது இந்து மக்களிடையே இறைவன் மீதான பக்தியை வளரவைக்க இந்தப் பாடல்கள் உதவி வந்துள்ளன.

இப்பொழுதெல்லாம் ஜனரஞ்சகமாகத் திருவெம்பாவையைப் பாட முனைந்துள்ளார்கள். இதைப் பிழையென்று கூறமுடியாது. எப்பேர்ப்பட்ட பாடும் விதம் எமது மனதில் இறையெண்ணத்தையும் பக்தியையும் கொண்டுவர உதவியாக அமைகின்றதோ அந்த முறையில் பாடுதல் பிழையென்று கூறமுடியாது.

என்னுடைய 75 வருடகால வாழ்க்கையில் திருவெம்பாவை பாடும் விதங்களிலும் வித்தியாசங்கள் உட்புகுந்துள்ளதை அவதானிக்கின்றேன். முன்னர் எல்லாம் மிகவும் நேரம் எடுத்து இராக ஆலாபனைகளோடு பாடுவார்கள். இப்பொழுது எவ்வளவு விரைவாகப் பாட முடியுமே அவ்வளவு விரைவாகப் பாடி முடித்து வீடு போய்ச் சேர வேண்டும் என்ற விதத்தில் பாடுவது போல் பாடுகின்றார்கள். நான் உங்களைக் கூறவில்லை. நீங்கள் நன்றாகத்தான் பாடுவீர்கள்என்று நம்புகின்றேன். கொழும்பில் நடப்பதை நான் கூறினேன்!

மணிவாசகரின் பாடல்கள் பக்திக்கென்றே யாக்கப்பெற்ற பாடல்கள். அதனால்தான் "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்று கூறினார்கள். எனவே உங்கள் கிராமத்தில் இறை பக்தியையும் தமிழ் மொழிப் பாவனையையும் மக்களிடையே ஒரு ஒழுக்கத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த நீங்கள் செய்துவரும் இந்தக் கைங்கரியம் பாராட்டுதலுக்குரியது.

பன்னாலை வாசிகள் எக்காலமும் இந்த நல்லதொரு கைங்கரியத்தை வருடந் தோறும் திருவெம்பாவைக் காலத்தில் ஆற்றிவர இறைவன் நல்லருள் புரிய வேண்டும்.

உங்கள் பாடல்களினால், கூட்டுப் பிரார்த்தனையால், மக்கள் மனதில்

இறைபக்தி ஓங்கிப் பெருகவேண்டும். "அரசன் அன்று கொல்வான் ஆண்டவன் நின்று கொல்வான்" என்பது ஆன்றோர் வாக்கு. பல தகாத நடவடிக்கைகள் எம் காலத்தில் நடந்து அவற்றிற்குப் பரிகாரங்கள் இல்லையா என்று மக்கள் ஆதங்கப் பட்டு அதன்பின் அவை காலக்கிராமத்தில் ஆதவனைக் கண்ட பனிபோல் மறைந்து போயுள்ளதை நாம் கண்டுள்ளோம். ஆண்டவன் நின்று கொல்வான் என்பது உண்மை. ஆகவே இறைவனை மனதார வேண்டுவதே எமது கடப்பாடு. வேண்டுதல் செய்துவிட்டு மற்றவற்றை அவனிடத்தில் விட்டு விடுவதுதான் உகந்த முறை. அந்த இறைவனை வருடா வருடம் வாயார வாழ்த்தும் உங்கள் வாழ்த்தத்தகு கைங்கரியம் வாளாது வளர்க என்று வாழ்த்தி விடைபெற்றுக் கொள்கின்றேன்.

## தெல்லிப்பழை - பன்னாலை கூட்டுப்பிரார்த்தனை சபையின் பவளவிழா





PUPLIC LIBRARY
JAFFN



# பண்ணிசை வேந்தர்
# அமரர் செ. இராசையா அவர்கள்

**ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள்**



பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன் பரமனையே பாடுவார் அடியார்க்கு மடியேன் சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கு மடியேன்...

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் அடியார் புகழ் பேசுகிறார். 'பரமனையே பாடுவாரடி யார்க்குமடியேன்' என்ற அடி மிகவும் சிந்திக்கத் தக்கது. பரமனுடைய புகழைப் பாடுகின்றவர்கள், கேட்கின்றவர்கள் எல்லோருமே உயர்ந்தவர்கள் என்பதை உணரமுடிகிறது. பரம்பொருளாகிய இறை வனது அருட் செயல்களை நினைந்து நினைந்து பாடுகின்றவர்கள் பெரும் பேறெய்துவர். அவர்களே சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள். பண்ணென்ற இசைபாடும் அடியார்களும் அவ்விசை யைக் கேட்போரும் தம்மையறியாமலே தமது சித்தத்தை இறைவனிடம் ஒப்புவித்து விடுவார்கள். அருணகிரிநாதசுவாமிகள் 'பாடும் பணியே பணியாயருள்வாய்' என்றார். பாடும் பணி பெரும் பணி. இப் பணியைத்தான் சமய குரவர்களும் மற்றும் திருவருட் செல்வர்களும் செய்தார்கள். பெறலரும் பேறுகளைப் பெற்றார்கள். இந்த விஞ்ஞான யுகத்திலே கூடச் செய்ய முடியாத செயற்கரும் செயல்களைச் செய்தார்கள். அந்தச் சிவநெறிச் செல் வர்களது பாடல்களை ஓதுபவர்களும் உயர் நிலையெய்துவர். தெய்வத் திருவருட் பாடல்களை ஓதுகின்றவர்கள் ஓதுவார்கள் என்ற பெயரையே பெற்றுவிட்டார்கள். ஓதுவார் பரம்பரை இந்திய நாட்டிலும் ஈழத்திலும் இருந்து நற்பணி புரிந்தது. இப்பொழுதும் அப்படியான பரம்பரை யொன்றுண்டு.

## இளமைப் பருவம்

ஈழத்தில் ஓதுவார் பரம்பரையை உரு வாக்கிய பெரியார்கள் வரிசையில் முத லிடத்தை வகிக்கக்கூடியவரே பண்ணிசைச் செல்வர் தாவடியூர் செ.இராசையா அவர்கள். உரும்பிராய்ப் பதியில் உத்தம குடியிற் சீரும் சிறப்புமாய் வாழ்ந்த செந்தமிழ்ச் சான் றோரான திரு.செல்லையா தம்பதிகள் பெற்றெடுத்த நற்புதல்வரே இராசையா அவர்கள். ஆரம் பத்தில் தமிழக வித்துவான் களிடம் இசை பயின்ற திரு. இராசையா அவர்களுக்கு, இசைவல்லார் குப்பிளான் சி.செல்வத்துரை அவர்களது நற்றொடர்பு ஏற்பட்டது. திரு.செல்வத்துரை அவர்

களிடம் பண்ணிசைப் பயிற்சி பெற்ற திரு. இராசையா அவர்களுக்கு சுரலய வள்ளல் சிதம்பரம் மு.கனகசபைப்பிள்ளை அவர்களிடம் விசேட பயிற்சிபெறும் அரிய வாய்ப்பும் கிடைத்தது.

## சிறந்த நடிகர்

பண்ணிசையுலகில் திரு.இராசையா அவர்கள் ஓதுவார் மூர்த்தி. நாடக உலகில் பரமாத்மா. இளைஞராக இருந்தபோது பல மேடைகளில் தோன்றி நடித்து ஸ்ரீமான் பொதுசனங்களின் அமோகமான பாராட்டுதல்களைப் பெற்றவர், சுபத்ரா, அர்ச்சுனா நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. கிருஷ்ணர் வேடம் தாங்கித் திறமையாகப் பாடியும் கச்சிதமாய் நடித்தும் 'பரமாத்மா' என்ற சிறப்புப் பட்டத்தைத் தமக்கு உரிமை யாக்கி கொண்டவர். நாடக உலகில் 'பரமாத்மா இராசையா' என்பது இவரது சிறப்புப் பெயர். ஈழத்தில் இவர் தோன்றாத இசை மேடைகள் இல்லையெனலாம்.

## ஆசிரியப் பணி

சைவ தமிழ் விருத்தியின் பொருட்டு இந்துக் கல்லூரி அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் ஒன்றாகும். நாவலர் நோக்கத்தை அடிப்படையாய்க் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனமே இந்துக் கல்லூரி அதிகார சபை, இச்சபையால் ஸ்தாபிக்கப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் திருமுறைகளைச் சிறப்பாக ஓதுவதற்கு உறுதுணையாக, கொக்குவில் இந்துக் கல்லூரியில் பண்ணிசை வகுப்புக்களை ஆரம்பித்ததும் அங்கே பண்ணிசை வேந்தர் திரு.செ.இராசையா கடமை புரிய வாய்த்ததும் பெருமை தருவதாகும். ஒரு வருடமல்ல, இரண்டு வருடங்களல்ல, பதினேழு ஆண்டுகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பண்ணிசை ஆசிரியராயிருந்து குழந்தைச் செல்வங்களுக்குத் திருமுறைகளை ஊட்டிவந்தார் என்றால், அதற்குப் பூர்வ புண்ணியப் பயன்தான் உதவியதாயிருக்கலாம் என்றால் மிகை யாகாது. இக்காலங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பண்ணிசை பயின்ற மாணவர்கள் திருமுறைகளை ஒழுங்காகப் படிக்கவும் பண்ணுக்கிசையத் திருமுறைகளைப் பாடவும் வாய்பைப் பெற்றனர். திரு. இராசையா அவர்களைத் தேவார ஆசிரியராகக் கொண்டு சிவதொண்டன் நிலையத்திற் கற்ற மாணவர்களும் அத்துறையிற் சிறப்புப் பெற்றனர்.

## பண்ணிசைக் கச்சேரி

ஓதுவார் திரு.இராசையா அவர்கள் ஆலயங்களிலோ பொது வைபவங்களிலோ திருமுறைகளை ஓதும் முறை ஒரு தனி முறை. ஜனரஞ்சகமாய்ப் பாடவேண்டுமென்றோ கச்சேரி சோபிக்க வேண்டும் என்றோ அவர் கருதுவதில்லை. சாஸ்திரத்துக்கு மாறில்லாமல், பண்களின் சீர் குன்றாமல் ஓதுவதே அவரது முறையில் இருந்தது. இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் பண்ணிசை வேந்தர் திரு. இராசையா அவர்களது பண்ணிசைக் கச்சேரி புன்னாலைக் கட்டுவன் நாச்சிமார் கோயிலில் இடம்பெற்றது. அடியார்கள் திரண்டிருந்த அச்சபையில் திரு. இராசையா அவர்கள் திருமுறைகளை ஒழுங்காகப் படித்துக் கொண்டிருந்தார். 'மாதர்மடப்பிடி' என்ற தேவாரத்தை மிகவும் உருக்கமாகத் தாளக் கட்டுடன் பாடிக் கொண்டிருந்த போது அங்கே அவரது குருவான குப்பிளான் இசை வல்லார் செல்வத்துரை அவர்களது உயர்ந்த நடையையே காணமுடிந்தது. சுமார் மூன்று

மணி நேரம் அலையடங்கிட சமுத்திரம் போல் திரண்டிருந்த மெய்யடியார்கள் திருமுறையாம் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த காட்சி இப்பொழுதும் எம் மனதில் பசுமையாகக் காட்சி தருகிறது.

## திருமுறை இசையுலகம்

திரு. இராசையா அவர்கள் எந்த வித்துவானிடமும் காழ்ப்புக் கொள்ளா தவர். தமக்குத் தெரிந்த இசை நுட்பங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார். மற்ற வித்துவான்களிடம் காணப்படும் இசை நுட்பங்களையும் கேட்டறிந்து விருத்தி செய்தார். இசை மன்றங்கள் பலவற்றிலும் அங்கம் வகித்து இயன்ற அளவு பணிபுரிந்தார். வித்தியா பகுதியின் ஆதரவுடன் ஸ்தாபிக்கப்பட்ட பண்ணிசை மன்றத்தில் அங்கத்துவம் வகித்து அவர் கூறிய அறிவுரைகள், ஆலோசனைகள் பொன் போன்றவை.

பண்பற்றிய ஆராய்ச்சி இம் மன்றத்தில் இடம்பெற்றபோது திருமுறைகளை ஓது பவர்கள் இரு அம்சங்களை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். ஒன்று பண்; மற்றது இராகம். இந்த இரண்டுக்கும் உதவியா யுள்ளது கட்டளை. பாடுகின்றவர்களின் நல் உணர்ச்சிக்கு ஏற்றவாறு பண்கள் சிறப்படைகின்றன என்று இரத்தினச் சுருக்கமாய்க் கூறினார்கள் திரு. இராசையா அவர்கள். இவ்வாறு திரு. இராசையா அவர்கள் வழங்கிய உருப்படியான ஆலோ சனைகள் பல.

பண்களைக் கண்களெனப் போற்றி வந்த ஓதுவார் மூர்த்தி திரு. இராசையா அவர்கள், சிதம்பரம், திருச்செந்தூர் திருப்பனந்தாள் முதலாம் தேவஸ்தானங் களில் பண்ணிசை பாடிப் பல விருது களையும் பெற்றவர் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

## பரம்பரை

இசையுலகுக்கு என்று ஒரு பரம்பரை நம்நாட்டில் வளர்ந்து வருவதை யாரும் மறுக்கமுடியாது. குலவித்தை கல்லாமற் பாதி என்பார்கள். திரு. இராசையா அவர் களுடன் சிறுவயதில் இருந்தே பண்ணிசை பாடி அத்துறையில் இன்று சிறந்த வித்து வானாய் மிளிரும் திரு.திருஞானசம் பந்தனைப் பெற்றெடுத்த பெருமையும் ஓதுவார் மூர்த்தி திரு.இராசையா அவர் களுக்குண்டு. தன்னுடைய இசைப் பரம்பரை மாண்டு மறைந்து போகாமல் நிலைக்கும் பொருட்டு, தன்னுடைய மகன் திருஞான சம்பந்தனைப் பண்ணிசை வழியில் ஆளாக்கி விட்டுப் போய்விட்டார் திரு.இராசையா அவர்கள்.

திருமுறைகளைச் செப்பமுறப் பாடுவ தோடு மாத்திரம் நிற்காமல் பண்புடன் வாழ்ந்த சான்றாண்மையாளருமாக அவர் பண்ணிசை மூலங் கொண்ட இறைபக்தி மகோன்னதமானது; தூய்மையானது. திரு முறை இசையுலகில் சிகரமமெனத் திகழ்ந்த ஓதுவார்மூர்த்தி திரு.இராசையா அவர்கள், தாம் மறைந்த பின் தாம் போற்றி வளர்த்த பண்ணிசை திக்கெட்டும் வளம்பெற நல்ல இசைப் பரம்பரையை ஏற்படுத்தினார். எனவே தமிழ்ப் பரம்பரை விசேடமாக இசைப் பரம்பரை அவருக்கு நன்றி செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

# உணவு தெய்வீகம் (Food is god)

**வைத்தியகலாநிதி த. பேரானந்தராஜா அவர்கள்**

*யாழ் போதனா வைத்தியசாலை*

**இன்று ஒரு பொன்னாள். தங்கம்மா அப்பாக்குட்டி எனும் மனிதரில் மாணிக்கம் பிறந்த நாள். அவர்களின் நினைவாக உணவின் மகத்துவம், சைவ உணவின் முக்கியத்துவம், மருத்துவ ரீதியாக எவ்வளவு உயர்ந்தது. அது எவ்வாறு நோய்களை வராமல் தடுக்கிறது என்பது பற்றிப் பார்ப்போம்.**

மனிதன் உயிர்வாழ்வதற்கும், உயர்வு பெறுவதற்கும், மனிதநேயமிக்க உயர் பண்புகளுடன் வாழ்வதற்கும் தலையாய துணை போவது அவன் உட்கொள்ளும் உணவு. இதைப் பண்டைக் காலத்து ஞானிகள், தவமுனிவர்கள், அறிஞர்கள் முதல் இன்றைய நவீன விஞ்ஞானிகள், வைத்தியர்கள் வரை அறிந்துள்ளார்கள் "அன்னப் பிரம்மம்" – அன்னம் என்பது உணவு. பிரம்மம் என்பது இறைவன். எனவே உணவு தெய்வீகமானது. "அன்னம் ந நிந்த்யாத்" – "உணவை இகழாதே" – இவை எல்லாம் வேத வாக்குகள். எனவே இன்றும் நாங்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு உணவு எப்படி அமையவேண்டும், நாங்கள் உண்ணும் உணவு எங்களுக்கு எங்கள் உள, உடல் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளதா என்பனவற்றைத் தெரிந்து கொள்வதால் நாங்கள் உடல் ஆரோக்கியத்துடனும், உள்ள உயர்வுடனும் ஆன்மீக வளர்ச்சி யுடனும் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்".

நாங்கள் உணவு உண்ணமுதல், உணவு பரிமாறப்பட்டதும், ஒரு சில விநாடிகள் அமைதியாகப் பிரார்த்தனை செய்த பின்னரே உணவு உண்ணத் தொடங்கு கிறோம். இந்தப் பிரார்த்தனை எமக்கு உணவு தந்தருளும் இறைவனுக்கு நன்றி தெரிவிப்பதோடு, உணவு எதற்காக என்பதையும் தெரிவிக்கிற ஒன்றாக அமை வதை, ஆதிசங்கரர் அன்னபூரணி நாயகியைக் குறித்துப் போற்றிய அன்னபூரணி தோத் திரம் நன்கு விளக்குகிறது. அன்னபூர்ணா தோத்திரத்தில் நிறைவாக ஞான வைராக்கிய சித்தியர்த்தம், பி(B)ஸ்சா தேஹி பார்வதி எனக்கு நல்லறிவையும் ஆசையற்ற தன்மையும் (நல்லொழுக்கமும்) கைகூடும் வகையில் உணவு தாருங்கள் என்பது இதன் பொருள். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது நாம் உண்ணும் உணவு நமக்கு நல்லறிவையும் நல் ஒழுக்கத்தையும் தரவேண்டும் என்பதாகும்.

ஒரு நீதி தவறாத சக்கரவர்த்தி ஒரு சமயம் ஒரு சிறந்த தவஞானியைத் தனது அரண்மனைக்கு அழைத்து உபசரித்தார். மூன்று நாட்கள் தன் அரண்மனையில் தங்கவேண்டுமெனப் பணிவாக வேண்டி னார். மன்னனது பக்தியையும் பணிவையும் உணர்ந்த அந்த மாபெரும் தபோதனர் அந்த வேண்டுகோளை ஏற்று அரண்மனை யில் தங்கினார். இரண்டாவது நாள் இரவு உணவு ஏற்றபின் முனிவர் உறங்கச் சென்றார். ஆனால் அன்று அவரால் நிம்மதியாக உறங்க இயலவில்லை. அவரது மனம் பல தீயசிந்தனைகளால் கலங்கியது, குழப்ப முற்றது. அரண்மனைப் பொருள்களை களவாடவேணும், தவறான சுகங்களை

அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அடிக்கடி தலைதூக்கி அவரைக் கலக்கின. அடுத்த நாட் காலையில் தான் பட்ட அவலத்தைச் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்தி "மன்னா இத்தனை காலம் எனக்கு ஏற்படாத தீய எண்ணங்கள் பல என்னைக் கடந்த இரவு கலக்கின. இதற்கு நான் நேற்று உட்கொண்ட உணவில் தான் ஏதாவது தவறு ஏற்பட்டிருக்கவேண்டும்" எனத் தெரிவித்தார். சிறந்த மாபெரும் ஒழுக்க சீலனான சக்கரவர்த்தி அதைப் புரிந்து கொண்டு அரண்மனை உணவு தயாரிப்பவர்களை அழைத்து விசாரித்தார். அப்பொழுது நேற்றுத் தயாரித்த உணவுக்கான பொருட்கள் தவறான இடங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பது தெரியவந்தது. தவறான உணவு உள்ளத்தைப் பாதிக்கும் என்பதை இதன் மூலம் நாங்கள் அறியலாம்.

விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இன்று இதை நாம் நன்கு விளங்கிக் கொள்ள முடியும். அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டும் உணவு உண்ணும் போது நாங்கள் உண்ணும் உணவிலும் அவசியமாகிறது.

நாங்கள் உண்ணும் உணவு எமக்கு நலம் தரவேண்டும். நலம் எனும்போது உடல் ஆரோக்கியம் மேலான எண்ணங்கள் இரண்டையும் குறிக்கும். உடல் ஆரோக்கியத்துக்கு எவை எவை உகந்த உணவுகளோ அவற்றை அளவறிந்து காலம் உணர்ந்து தேவைக்கேற்ப நாம் உண்ண, அந்த அந்த உணவே எமக்கு நல்ல எண்ணங்கள் நல் அறிவு இவைகளைத் தந்து உதவும். இது விஞ்ஞானபூர்வமான உண்மை அன்று. மெய்ஞ்ஞானிகள் காட்டிய உண்மை.

இன்று விஞ்ஞான ரீதியாகப் பார்க்கில் உணவு எல்லாவகையிலும் சீர் அமைந்ததாக (Balanced Diet) இருக்க வேண்டும். மாச்சத்து (Starch) தாதுக்கள் (Minerals) புரதச்சத்து (Protein) கொழுப்புச்சத்து (Fat), உயிர்ச்சத்து (Vitamin) இவையெல்லாம் பொருந்திய உணவு இந்தச் சத்துக்கள் அவரவர் உடல் தேவைகளைப் பொறுத்து அளவில் மாறுபடும். இவற்றை நாம் தகுதி உணவுக்கலை அறிஞர் மூலம் (Dietician) அறிந்து கொள்ளமுடியும். இங்கு நாம் முக்கியமாக அவதானிக்கவேண்டியது யாதெனில் நாம் "வாழ்வதற்காக உணவே தவிர, – நாம் உண்பதற்காக வாழ்வு இல்லை" – (We eat to live - not live to eat) என்பதாகும். வள்ளுவம் இதை அழகாகக் கூறும்.

**"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போற்றி உணின்"**

முன் உண்ட உணவு செரித்தபின் தக்க அளவு உண்டால்; உடலுக்கு மருந்து என்ற ஒன்று வேண்டியதில்லை.

**"அற்றால் அளவு அறிந்து உண்க அஃது டம்பு**
**பெற்றான் நெடிது உய்க்குமாறு"**

உண்ட உணவு செரித்த பின் வேண்டிய அளவு உண்பவன்; பெற்ற உடம்பை நெடுங்காலம் பேணிக் காக்கும் வழியாகும்.

**"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல**
**துய்க்க துவரப் பசித்து"**

முன் உண்ட உணவு சமித்த பின் மாறுபாடில்லா உணவைக் கண்டறிந்து நன்றாகப் பசித்தபின் உண்ணவேண்டும்.

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு"**

மாறுபாடில்லாத உணவை அளவோடு உண்டால் உயிர் உடம்பில் உறைவதற்கு ஊறு உண்டாகாது.

**"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்
கழிபே ரிரையான் கண் நோய்"**

குறைந்த அளவு உணவு அளவோடு உண்டால் உயிர் உடம்பில் உறைவதற்கு ஊறு உண்டாகாது.

எனவே எங்கள் உடல் ஆரோக்கியம், உளநலம், தூய சிந்தனைகள், மன அமைதி, ஒருமைப்பாடு இவற்றை ஏற்றம் காண வைப்பதற்கான பொருத்தமான தூய உணவை நாம் உண்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் காலம் அறிந்து தேவை கண்டு அளவோடு அறிவோடு உண்பதுமாம். அளவு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை ஒரு போதும் மறக்கலாகாது.

இன்று அநேகமானவர்கள், தங்கள் உணவுப் பழக்க வழக்கங்களில் கவனம் எடுப்பதில்லை. வாய்க்குச் சுவை, வயிற்றுக்கு வருத்தம். பிழையான உணவுப் பழக்கமே இன்று மிகுந்து காணப்படும் நீரிழிவு, சிறுநீரக நோய்கள், இருதய நோய், குடற்புண், குடல்புற்று நோய், இரத்த அழுத்தம் போன்ற பல பல நோய்கள் அதிகரித்துக் காணப்படுவது நம்மவர்களது தவறான உணவுப் பழக்கத்தாலே எனின் அது மிகையில்லை.

வரமுன் காப்பதே அறிவுடைமை. இளம் வயது தொட்டு நாங்கள் உணவில் ஆரோக்கிய விதிகளை அறிந்து, அவற்றைப் பின்பற்றி வாழ்ந்தால் மேற்கூறிய நோய்கள் எம்மை அணுகாமல் முதுமையிலும் இளமையாக வாழலாம்.

ஆரோக்கியமான உணவு விதிகளோடு உணவைத் தயாரிப்பதிலும் சுத்தம் பேணுதல் அவசியம். ஒரு முதுமொழி கூறுவார்கள் – "பாகசுத்தி, பாத்திரசுத்தி, பரிமாறல் சுத்தி" உணவைச் சுத்தமாக சமைத்தல், தூய பாத்திரங்களில் பேணுதல், உணவு பரிமாறும் போதும் உண்ணும் போதும் தூய்மையாக சுத்தமாக இருத்தல் எல்லாமே சுகவாழ்வுக்கு அவசியமாம். இதைக் கவனியாத நிலையில் பல தொற்று நோய்கள் உதாரணமாக நெருப்புக் காய்ச்சல், பேதிநோய், வயிற்றோட்டம், கிருமிகள் தாக்கம் போன்றன ஏற்பட வாய்ப்புண்டு.

சுருங்கக் கூறின் உணவு எல்லாவிதமான கூறுகளையும் கொண்ட சீர் அல்லது சம உணவாக (Balance Diet) இருத்தல், உணவை ருசிக்காக அன்றி காலம் அறிந்து உண்ணல், அளவோடு உண்ணல், உண்ணும் பொழுது அமைதியாக, ஆறுதலாக மன ஒழுக்கத்துடன் (அதாவது ஏனைய கவலைகளை ஒதுக்கி படபடப்பின்றி உண்ணல் (T.V). பார்த்துக் கொண்டோ, கோபம் படபடப்புடன் கதைத்துக் கொண்டோ உண்ணுதல் தவிர்த்து) இவை எல்லாம் நாங்கள் நோய் இன்றி பூரண ஆயுளுடன் வாழ வழிவகுக்கும்.

தூய உணவு என்பதில் தாவர உணவே மிக மிக உயர்ந்தது, சிறந்தது, ஆரோக்கியம் தருவது. அன்பைப் பெருக்குவது. அமிர்தம் போன்றது. தாவர உணவில் இல்லாத சக்தியே இல்லை என்பது உறுதி. ஆராய்ச்சி தந்துள்ள உண்மை. எங்கள் ஆரோக்கியத்துக்கு அவசியமான மாப்பொருள் (Starch), புரதம் (Protein), கொழுப்பு (Fat), இரும்புச்சத்து (Iron), உயிர்ச்சத்து (Vitamin)

உலோகக் கூறுகள் (Minerals) எல்லாமே காய் பழவகை, கீரை வகைகள், தானிய வகைகள், பால், நல்எண்ணெய், சுத்தமான பசுநெய் போன்றவற்றில் தேவையான அளவு உண்டு. உணவு வல்லுநர்கள் மூலம் (Dietician) இவற்றை நாம் நன்கு அறிந்து கொண்டு எமக்குத் தேவையான உணவைப் பயன்படுத்தி எமது உடல் உள நலத்தைச் சீராகப் பேணலாம்.

இயற்கை எமக்கு காட்டுவதும் தாவர உணவின் உயர்வை எமக்கு விளக்கு கிறது. நீண்ட ஆயுளுடன், தேக ஆரோக் கியத்துடன் நாங்கள் வாழலாம். யானை, பசு, எருது, மான், குதிரை, ஒட்டகம் போன்ற ஆக்க வேலைகள் செய்கிற விலங்குகள் எல்லாம் தாவரங்களையே உண்கின்றன. நீண்ட காலம் வாழ்கின்றன. யானை 100 வருடங்கள் வரை வாழ்கிறது. குதிரை சக்தி அளப்பரியது. மானின் வேகம், எருதின் உழைப்பு, பசுவின் புனிதம் இவை பற்றி ஆழ்ந்து சிந்திப் போம்.

மாறாக மாமிசங்கள் உண்ணும் மிருகங்கள் 10–15 வருடங்களே உயிர் வாழ்கின்றன. உண்பது, உறங்குவது தவிர அவை வேறு என்ன செய்கின்றன?

மாமிச உணவு பலவகையான ஆரோக் கியக் குறைவுகள். உதாரணம் – அமிலம், குடற்புண், வாதநோய்கள், தோல் வியா திகள் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைகிறது. விஞ்ஞானபூர்வமாக நவீன மருத்துவர்கள் கண்ட உண்மை. பொரு ளாதார வகையிலும் ஒரு மிருகத்துக்கு 10–15 கிலோ தாவர உணவு அளிப்பதன் மூலம் இருவர் உண்ணக்கூடிய 1 கிலோ இறைச்சியைத் தான் பெறமுடியும் என அறியமுடிகிறது.

சுருங்கக்கூறின், கிருமி நோய்கள், குடற்புண் (Ulcer), வாதநோய்கள், தோல் நோய்கள், ஆஸ்த்துமா, உளநோய், இருதய நோய், இரத்த அழுத்தம், புற்றுநோய், சிறுநீரகக் கோளாறுகள். இவை எல்லாம் உணவிலிருந்து அசைவ உணவு நீக்கப்படுமிடத்து, எங்களை அணுகுவதில்லை என்பதை மருத்துவ நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர். எனவே நாங்கள், நீடு வாழ்வதற்கு ஆற்றல் மிக்கவர்களாக அறிவு, அமைதி, நற்குணம் கூடி வாழ்வதற்கு உதவும் தாவர உணவு களை உண்ணுதல் சிறந்ததாகும்.

தாவர உணவு உண்பவர்களும் நோயின்றி வாழ்வதற்கு அளவோடு, தேவை அறிந்து, வகை தெரிந்து உண்ண வேண்டும். போதிய அளவு கொதிக்க வைத்து ஆறிய நீர் இயற்கையான பழச்சாறுகள் (போத்தல்கள் அல்ல) அருந்தவேண்டும். இனிப்புப் பலகாரங்கள், Chocolates, Ice Cream போன்ற இனிப்பு வகைகள், புளிப்புப் பண்டங்கள் இவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

நிறைவாக நாம் உண்ணும் உணவு நமக்கு உடல் வளத்தைத் தருவதோடு அமையாமல் நம் உள்ளத்தையும் ஓங்கு விக்கிறது. எனவே நாம் உணவு உட் கொள்ளும்போது அமைதியாக, அன்பாக, மனமகிழ்வோடு உண்ண வேண்டும். இயன்றளவு குடும்பத்தினருடன் அன்பர் களுடன் சேர்ந்து உண்ணுதல் நன்று. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டோ, வீண் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய

பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டோ ஒரு போதும் உணவு உட்கொள்ளலாகாது. படபடப்பாக, அவசரமாக உண்ணக் கூடாது. உணவு அருந்த முன்னரும் பின்னும் பிரார்த்தனை செய்து இறைவனுக்கு நாங்கள் நன்றி சொல்வதோடு, நாம் உண்ணும் உணவை நாம் பெறுவதற்கு எத்தனை பேர் உழைத்திருக்கிறார்கள் என்று நினைவுகூர்ந்து அவர்கள் எல்லோருக்காகவும் பிரார்த்தித்து உண்ண வேண்டும். இது எங்களுக்கு மனநிறைவு, மனமகிழ்வு தரும். அதனால் எமது உடல் சீராக இயங்கும். மனதுக்கும் – எண்ணங்களுக்கும் உடலுக்கும் நெருங்கிய உறவு உண்டு என்பதை நாம் அறிந்து கொள்ள, விளங்கிக்கொள்ள வேண்டும்.


**அளவோடு உண்போம்**
**அமைதியாக உண்போம்.**
**தூய உணவை உண்போம்**
**தூய்மையான உடல், சிந்தனையுடன் உண்போம்.**
**குடும்பத்தினருடன் உண்போம்**
**நன்றி உணர்வுகளுடன் உண்போம்**
**நலம் என்றும் பெறுவோம்.**

# உட்கார்ந்த நிலையில் உணவருந்த வேண்டும் என்பது ஏன்?

**உணவருந்தும் கலாச்சாரம் மாறிவர இன்று நம் நாட்டில் நடந்தும் நின்றுகொண்டும் உணவருந்துகின்றோம். குழந்தைகளுக்கும் அவ்வாறே உண்ணப் பழக்குகின்றோம்.**

**சாணம்பூசிய தரையில் பனையோலைத் தடுக்கில் சப்பணமிட்டு உட்கார்ந்து முன்பக்கப் பார்வையுடன் உணவருந்த வேண்டும் என்பது தொன்றுதொட்டுள்ள பழக்கம். தரையில் பலகையிட்டு அதில் சப்பணமிட்டு அமர்ந்தும் நம் நாட்டினர் உணவருந்துகின்றனர். "பாதணி"களைக் கழற்றாமல் காலின்மேல் கால் வைத்து சாப்பாட்டு மேசைக்கு முன்னிலிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டே உணவருந்துவதைவிட நம் முன்னோர்கள் பாணி அழகுள்ளது. அவ்வாறு அமர்ந்து உண்பதில் உடலுக்குச் சில பயன்கள் உள்ளதாக நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். ஆனால் சுகபோகங்களின் நடுக்கடலில் அலைந்து திரியும் நவீன மக்கள் இந்த வாழ்க்கை இறைவன் அருளியது என்பதை உணர்வதில்லை. நாம் உணவருந்தும் போது உடலின் மூட்டுக்களில் அசைவு ஏற்படுகின்றது என்று இன்றைய சாஸ்திரம் அறிவிக்கின்றது. இந்த அசைவு முட்டுக்களுக்கு அதிகபாரம் உண்டாக்கும். அமர்ந்த நிலையில் உணவருந்தினால் இந்தப் பாரத்தைக் குறைக்க இயலும். மேலும் நின்றுகொண்டு உணவருந்தினால் மிதமிஞ்சி உணவருந்த வாய்ப்புண்டு. அதிகமாக உண்ணுவதும் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதும் நாம் அறிவோம். வயிறு நிரம்ப உண்ணாதவர்கள் பல நோய்களிலிருந்து விலகியிருப்பார்கள் என்று மருத்துவத்துறை பல வழியில் அறிவித்துள்ளது.**

**– ஓலைச்சுவடி**



தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த திருமுறை ஓதுவார்கள் எமது தேவஸ்தானத்தில்....



துர்க்காதேவி வீட்டுத்திட்டத் திருப்பணியில் மூன்று வீடுகளைக் கட்டுவதற்கு உதவிய மலேசியா திருமதி. ஞானதேவி ஜெகேந்திரன் குடும்பம் வீடுகளைப் பார்வையிடும்போது...

## பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்
## பவளவிழாக் குறித்து

# வாழ்த்துகிறோம்



பவளவிழாக் கண்டு
பணி தொடரும் பண்புடைச் சான்றோர்
தமிழ் கூறும் நல்லுலகறிந்த
தமிழ்ப் பேராசிரியர்
மக்களை நேசித்து மக்கள் உறவை வளர்த்த
மனித நேயர்
ஏழைச் சிறாரின் நிறைவாழ்வை
ஏற்றமுறச் செய்த ஏணி
மண்ணில் நல்லவண்ணம் வாழ
மனதார வாழ்த்துகிறோம்

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

# மானிப்பாய் மருதடி விநாயகர்

ஈழத் திருநாட்டில் விநாயகர் திருக் கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநா யகர் ஆலயம். தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றது. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனி யாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு, சென்ற நூற்றாண்டில் பொதுக்கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காலம் தவறாத பூசை, வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப் பாட சாலை என ஆலய நிர்வாகம் மிகவும் சிறப் பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை மாதம் புது வருடப் பிறப்பன்று பல லட்சம் பக்தர்கள் புடை சூழ விநாயகப் பெருமானின் திருத்தேர் விழா நடைபெறும் மகிமை மிக்க மருதடி யான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர் மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

இப்புனித தலத்தின் கட்டட அமைப்பு நூற்றாண்டு கடந்த சுண்ணாம்பு கற்களா லான நிர்மாணமாக அமைந்திருந்தது. ஆலய வசந்த மண்டபம் மற்றும் பரிவார ஆலயங்கள் சீரான அமைப்பில் அமைக் கப்படாது உட்பிரகாரம் மிகவும் நெருக்க மாகவும் பக்தர்களுக்கு முழுமையாக பூசை வழிபாடுகளைத் தரிசிப்பதற்கு முடி யாத நிலையும் காணப்பட்டது. இந்நிலையில் பழம் பெரும் இத்தலத்தைச் சிறப்பாக நெறி முறைக்கு அமைய விசாலமாக அமைக்க வேண்டும் என்ற ஆவல் அடியார்கள் உள் ளத்தில் வியாபித்தது. ஆலய தர்மகர்த்தா சபை நாடறிந்த சிவாச் சாரியார், சமயப் பெரியோர்களை நாடி ஆலோசனை பெற்றனர். இந்திய சிற்பக் கலைஞர்களை அழைத்து சிவாகம நெறி முறைக்கு அமைய கருங்கற்களாலான கருவறை அமைப்பைக் கொண்ட அசையா நிலைக் கோவிலை உருவாக்கத் திட்ட மிட்டனர்.

அனுபவ ஞானமுடைய அகவை எண்பது நிறைந்த கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் கோப்பாய் சிவஸ்ரீ. வ. பரமசாமிக் குருக்கள் முன்னிலையில் ஆலய புனர்நிர்மாணத் திருப்பணி அங்கு ரார்ப்பணம் நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயக்குமாரக் குருக்கள் பாலஸ்தாபனக் கிரியைகளைச் சிறப்பாக நடாத்தி பாலாலயத்தில் விநாயகப் பெரு மானையும் பரிவாரத் தெய்வங்களையும் இருத்தி திருப்பணிக் கடமைக்காக ஆல யத்தை ஒப்படைத்தார். மாமல்லபுரச் சிற்பக் கலைஞன் செ.ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில் இரவு பகலாக பிரமாண்ட மான திருப்பணி வேலைகள் நடைபெற்ற வண்ணமாகவுள்ளது. இதுவரை நடைபெற்ற திருப்பணிகள் இந்தியாவிலுள்ள சோழர் காலத் திருக்கோவில்களின் வடிவம் போல் அடியார்களின் உள்ளத்தை ஆட்கொள் வதை உணரலாம். புதிய ஆலய புன ரமைப்பு மிகவும் விசாலமான அமைப்பாகக் காணப்படுகிறது. யாழ். குடாநாட்டில் சிற்பம் நிறைந்த பெருங்கோவில் என்ற தனித்து வத்தை மருதடியான் திருக்கோவில் பறை சாற்றும் என அனைவரும் கருதுமளவுக்கு நிர்மாண அமைப்பு எழுச்சி தருகின்றது.

*(தொடர்ச்சி 33ம் பக்கத்தில்.....)*

# சைவ எல்லப்ப நாவலர்

**திரு. மு. அருணாசலம் அவர்கள்**

16ஆம் நூற்றாண்டில் தோன்றிச் சைவ சமயத்தையும் தமிழ் இலக்கியத்தையும் வளர்த்த பெரும் புலவர்களில் சைவ எல்லப்ப நாவலரும் ஒருவர். "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்" என்று பாடிய பெருமையாலும், நாவன்மையின் சிறப்பாலும், இவருக்குச் சைவ என்ற அடையும் நாவலர் என்ற பட்டமும் அக்காலத்தில் வந்து பொருந்தின. இவர் திருவெண்காட்டருகேயுள்ள இராகவராய கோத்திரத்தில் பிறந்தவர். தந்தை பெயர் உண்ணாமுலைப்பிள்ளை. இவரது இயற்பெயர் எல்லப்பர். தாய்வீட்டில் வளர்ந்தமையால். தாழைநகர் எல்லன் என்றும் இவரைச் சொல்வதுண்டு. (தாழை — அடுத்துள்ள பூந்தாழை என்ற ஊர்). இவர் பல புராணங்களும் பிரபந்தங்களும் செய்தார் : புராணங்கள் – திருவண்ணாமலை (அருணாசலபுராணம்), திரிசிராமலை (செவ்வந்திப் புராணம்), திருவெண்காட்டுப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம். இவற்றுள் திருச்செங்காட்டங்குடிப் புராணம் இன்னும் அச்சாகவில்லை. பிரபந்தங்கள் திருவருணைக்கலம்பகம், திருவருணை யந்தாதி, திருவாரூர்க் கோவை, திருப்பாலைப் பந்தல் உலா என்பன. உலாப் பிரபந்தம் கிடைக்கவில்லை. இவருடைய வாக்கின் சிறப்புப்பற்றி இவருக்குத் திவ்வியகவி என்ற ஒரு பட்டமும் வழங்கும்.

இவர் பாடிய நூல்களுள் அருணாசலபுராணம் சோழ நாட்டில் அதிகமாகப் பயிலப்பட்டது. சைவ வேளாளர் அனைவர் வீடுகளிலும் இதன் ஏட்டுப் பிரதிகளைக் காணலாம் இந்நூல்களையன்றி, இவர் வீரை — கவிராச பண்டிதர் பாடிய தமிழ்ச் சௌந்தரியலகரிக்கு விளக்கவுரையும் எழுதினார். அதன் மூலம் இவரது சாக்த சமய அறிவும் நன்கு விளங்கும்.

எந்த இடத்திலும் தம் நூல்களில் சைவ ஆசாரங்களையும் தத்துவங்களையும் உயர்த்திப் பேசுவது இவர் இயல்பு. சிறப்பாகப் பலர் சைவ நூலும் புராணமும் பாடியிருப்பினும், இவர் ஒருவருக்கே சைவ என்ற அடைமொழி உரியதாயிற்று. அன்றி முருகபக்தியிலும் இவர் தலைசிறந்தவர்:

**தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி**
**வாகையே சுடக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை.**

என்று இவர் பாடிய செவ்வந்திப் புராண வேல் வணக்கப்பாடற் பகுதி அனைவரும் அறிந்தது. நடராசப் பெருமானுடைய துதியாக இவர் பாடியுள்ள பாடலிலேயே நடன ஒலியைக் கேட்க முடிகிறது.

**முதிரும் சுவை மதுரம் பெற மொழியும் தமிழ் விரகன் புகழ்**
**பதிகம் புனை பவனம்பினர் பவபஞ்சன னமலன்கதி**
**குதிரும்படி பகிரண்டமும் விடையும்படி இலகும்படி**
**அதிரும்படி நடனம்புரி அதிருங்கழல் அதிருங்கழல்.**

இவருடைய மனைவி பெயர் சிவகாமசுந்தரி என்றும் அவரும் சிறந்த தமிழ்ப்புலமை பெற்றவரென்றும் சொல்வதுண்டு.

# திருக்கோணேஸ்வரம்

## திருகோணமலை வரலாற்றுத் தடங்கள்

திருகோணமலைச் சமூகத்தின் வரலாற்றுத் தடத்தில் துறைமுகமும், கோணேசர் ஆலயமும் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கொட்டியாரக் குடாவிற்கு தென்கிழக்காக அமைந்துள்ள இலங்கைத்துறை எனப்படும் துறைமுகமே அதிகளவில் தமிழகத்துடன் தொடர்பைக் கொண்டிருந்தது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாரம், குச்சவெளி ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்துக்குரிய கறுப்பு, சிவப்பு மட்பாண்டத் தொல்பொருட்சிதைவுகள் ஒரு நாகரீகமான ஆதித்திராவிட மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை உறுதி செய்கின்றன. மேற்படி அகழ்வுச் சிதைவுகளும், தமிழ்நாட்டு அரிக்க மேட்டில் கிடைக்கப்பெற்ற பெருங்கற்காலச் சிதைவுகளும் ஒத்த தன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. இந்தச் சிதைவுகள் கி.மு. 1000க்கும் கி.மு. 250க்கும் இடைப்பட்டதாகக் கருதப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியதாகக் கணிக்கப்படுவதால், திருகோணமலை மாவட்டத்தில் இக்கால கட்டத்தில் நவநாகரீகமாக மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்ய முடிகின்றது.

கோணேஸ்வரத்தின் மான்மீயத்தை வட, தென்மொழி நூற்கள் போதிக்கின்றன. பெரியவளமைப்பத்தி, கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, குளக்கோட்டன் கம்பசாத்திரம், திருக்கோணாச்சல புராணம், கைலாயமாலை, வையா பாடல், திருக்கோணாச்சல வைபவம், கோணமலை அந்தாதி, திருக்கரைசைப் புராணம், கதிரமலைப்பள்ளு என்பன திருகோணமலை வரலாற்றைக் கூறும் தொல் தமிழ் இலக்கியங்களாகும்.

மேலும், திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட சாசனங்களில் சோழர் காலச் சாசனங்களே அதிகமாகும். அதாவது கந்தளாய்க் கல்வெட்டு, பாலமோட்டைக் கல்வெட்டு, பிரடறிக் கோட்டைக் கல்வெட்டு, நிலாவெளிப் பிள்ளையார் கல்வெட்டு, மானாங்கேணிக் கல்வெட்டு, காளிகோவிற் கல்வெட்டு என்பன சிலவாகும்.

## திருக்கோணேஸ்வரமும் தோற்றக் காலமும்

திருக்கோணேஸ்வரத்தை வட, தென் தொழித்தொல் இலக்கியங்களும், புராணங்களும் போற்றிப் பாடியுள்ளன. திருக்கோணேஸ்வரம் குறித்து பல ஐதீகக் கதைகளும் உள்ளன. தட்சணகைலாயம், மச்சகேஸ்வரம் என்பன திருக்கோணேஸ்வரத்துக்கான மறு பெயர்களாகும். இந்தப் பெயர்கள் ஏற்பட புராணங்கள் கூறும் நிகழ்வுகள் இந்து மதச் சார்பானவை. ஆதிசேடனும் வாயு பகவானும் தங்கள் வலிமையைக் காட்ட முயன்று, ஆதிசேடன் மகாமேருவின் சிகரத்தை மூடிக் கொள்ள வாயுபகவான் மகாமேருவின்

சிகரங்களில் ஒன்றைப் பெயர்த்து கடலில் வீச, அது இலங்கையின் கிழக்குக் கரையோரமாக விழுந்து திருகோணமலையாக உருவாகியது என்பது புராணத்தில் இருந்து கிடைக்கும் செய்தியாகும்.

இமயமலையின் ஒரு பகுதியே கோணப் பர்வதம் என்ற நம்பிக்கை காரணமாகக் கோணேஸ்வரத்திற்கு தட்சணகைலாயம் என்ற பெயர் உருவாகியது. திருமால் மச்சவதாரத்தில் தட்சணகைலாயத்தை அடைந்து தனது மீன் உருவத்தை விட்டு நீங்கி மகேஸ்வரனை வணங்கியதால் மச்சகேஸ்வரம் என்ற பெயரும் உருவாகியதாக தட்சணகைலாய புராணம் கூறுகின்றது. புராண இதிகாசங்களில் இருந்து பல மறுபெயர்கள் அறிந்து கொண்ட போதிலும் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரே நீண்டகால வழக்கில் உள்ள தலப்பெயராகும். 7ஆம் நூற்றாண்டுக்குரியவர்களாகக் கருதப்படும் திருஞானசம்பந்தர் திருகோணமலை என்ற பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார். ஆனால் நிலாவெளிப் பிள்ளையார் கல்வெட்டில் திருக்கோணேஸ்வரத்தை மச்சகேஸ்வரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோகர்ணத்து சிவாலயமானது 10ஆம், 11ஆம் நூற்றாண்டுகளில் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டிருக்கின்றது.

வட இந்தியாவில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வாயு புராணத்தில் திருக்கோணேஸ்வரம் குறித்து சொல்லப்படுவதன் மூலம் இலங்கைத் தீவுக்கு வெளியேயும் அதன் புகழ் பரவியிருந்ததை அறியமுடிகின்றது.

## குளக்கோட்ட மன்னன்

குளக்கோட்ட மன்னன் வரலாற்றுப்புகழ் பெறக் காரணம் என்னவென ஆராய்வோமானால், கோணேசர் ஆலயத் திருப்பணிகளும், கந்தளாய்க் குளமுமே அடிப்படைக் காரணங்களாகும். இந்த இரண்டு காரணிகளும் நீங்கலாக வன்னியாட்சி ஏற்படுவதற்கும் குளக்கோட்டனே காரணமாக இருந்தான்.

குளக்கோட்டனைப் பற்றி குறிப்புத் தரும் நூற்களில் கைலாச புராணமே காலத்தால் முந்தியது ஆகும். மேலும் கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாச்சல வைபவம், திருக்கரைசைப் புராணம், கோணமாமலை அந்தாதி, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம் என்பனவும் குளக்கோட்டனைப் பற்றிய குறிப்புக்களைக் கூறுகின்றது. இவை தவிர குளக்கோட்டன் குறித்த பிரடறிக்கோட்டை சாசனம் குளக்கோட்டன் பற்றிய முக்கிய தகவலைத் தருகின்றது.

## குளக்கோட்டன் பற்றி கைலாச புராணம் கூறும் கதை :

கைலாச புராணம் தென் கைலாயத்தின் தல புராணம் என்கின்ற வகையில் தனிச்சிறப்பு வாய்ந்தது. திருக்கோணேஸ்வரத்தில் குளக்கோட்டனும், கயபாகு மன்னனும் ஆற்றிய தொண்டுகளைக் கூறும் நூல்களிலே மிகத் தொன்மையானது ஆகும்.

மனுநீதிகண்ட சோழன் மச்சேந்திரபுராணத்தில் கூறப்படும் கோணேசர் ஆலயத்தின் பெருமை அறிந்து தன் சுற்றஞ் சூழ அமைச்சர்களோடு திருக்கோணேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்தான். பூசைகளையும், விழாக்களையும் நடாத்திய மன்னன் தான் கொண்டு வந்த பொற்குவியலை திருக்கோணேஸ்வரத்தின் ஒரு கிணறு தோண்டி அதில் பாதுகாப்பாக வைத்தான். அத்துடன் இப்பொற்குவியல் கோணேசருக்கே உரியது என்று ஆணையிட்டு நாடு திரும்பினான். அங்கே தன் ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியதோடு தன் மகனை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திவிட்டு சிவகதி அடைந்தான்.

ஒரு அந்தணன் மன்னன் மறைந்த நாள் நினைவாகத் திருத்தல யாத்திரை செய்ய திருக்கோணேஸ்வரம் வந்த பொழுது பொற்குவியல் புதைக்கப்பட்டு இருந்த கிணற்றுக்கு அருகில் தூங்கினான். அங்கே தோன்றிய பூதம் மனுநீதி கண்ட சோழன் இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயப்பணி செய்த செய்தியைக் கூறியதோடு பொற்குவியல் புதைக்கப்பட்ட செய்தியையும் கூறியதுடன் இத்தகவல் அனைத்தையும் சோழனின் பெருமை மிகு மன்னனான குளக்கோட்டனிடம் கூறும்படியும் கூறியது. குளக்கோட்டன் அந்தணர் மூலம் பூதம் கூறிய செய்தியை அறிந்து திருக்கோணேஸ்வரத்தை அடைந்தான்.

குளக்கோட்ட மன்னன் கிணற்றருகில் அடைந்ததும், மீண்டும் தோன்றிய பூதம் மனுநீதிகண்ட சோழன் அடையாளமாக எழுதி வைத்திருந்ததாகக் கூறி ஒரு செப்பேட்டையும் கொடுத்தது. குளக்கோட்ட மன்னன் கிணற்றில் இருந்து பெற்றுக்கொண்ட பொற்குவியல் மூலம் கோணேசர் ஆலயத்தில் மகா மண்டபம், முன் மண்டபம், உயர்ந்த கோபுரங்கள், திருமால் கோட்டம், அன்னசத்திரம், ஓதுவார் மடம் ஆகியவற்றை அமைத்தான். அத்துடன் உமைக்கு ஒரு தனி ஆலயத்தையும், சுற்று மதிலையும், உருவாக்கினான். புலன்வழியால் உருவாக்கிய பாவங்களை நீக்கி இறையருள் பெறப் பாவநாச தடாகத்தை உருவாக்கி சிவன் நீராடுவதற்கு ஒரு தனியான மண்டபத்தையும் அமைத்தான். கோணேசர் ஆலயத்தைத் தரிசிக்கும் முனிவர்கள், துறவிகள், பிராமணர்கள், அடியார்கள் தங்குவதற்கு பெரும் மண்டபங்களும் மாளிகைகளும் உருவாக்கினான். மேலும் குளக்கோட்டன் திருகோணமலை நகரை மலரும், கனிகளும் தரும் மரங்களால் சோலையாக்கினான். இதையே "விளங்கும் இளங் காவனம் சூழ்ந்து வெய்யிலின் கிரணம் படாத புவி" என வர்ணிக்கிறது கைலாசபுராணம்.

குளக்கோட்ட மன்னன் தம்பலகம ஆதிகோணநாயகர் கோவிலுக்கு ஆற்றிய தொண்டுகள் பற்றி செவிவழிக் கதைகள், திரிகோணாசல புராணம், தட்சணகைலாயம், கோணேசர் கல்வெட்டு ஆகியன மூலம் அறிகின்றோம்.

*மூலம் : சரவணபவன்.க., (2003), "வரலாற்றுத் திருகோணமலை", திருகோணமலை வெளியீட்டாளர்.*

## திருக்கோணேஸ்வர ஆலய சிறப்பு

இறைவர் திருப்பெயர் – திருக்கோணேஸ்வரர்

இறைவியார் திருப்பெயர் – மாதுமையாள்

தலமரம் – கல்லாலமரம்

தீர்த்தம் – பாவநாசம்

வழிபட்டோர் – இராவணன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்

தேவாரப் பாடல்கள் – சம்பந்தர்

உலகப்புகழ்பெற்ற திருக்கோணமலை மாவட்டத்தில் அறுபதுக்கும் அதிகமான சைவக்கோயில்கள் உள்ளன. சைவம் கமழும் தமிழ்த் திருநாமங்கள் தாங்கிய பழைய ஊர்களில் செந்நெல்லும், கரும்பும், தென்னையும் செழித்து வளருகின்றன.

மிகப்பழைய காலத்து, இதிகாச நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்றன என்பதற்கு நிரம்பிய ஆதாரங்கள் இங்கே உள்ளன. குளக்கோட்டு மன்னன் செய்த தொண்டுகள் பலவற்றின் சுவடுகள் இன்றும் அறியக்கூடியனவாயுள்ளன.

இங்கே எங்கு நோக்கினாலும் சைவத் தமிழ்ப் பெயர்களே கேட்கின்றன. இன்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே திருக்கோணேஸ்வரம் தேவாரம் பெற்ற திருத்தலமாக ஒளி வீசியது. பாண்டியன் திருக்கோணமலையில் 'இணைக்கயல்' பொறித்துள்ளமை வரலாற்றுப் பெருமையாகும்.

PUPLIC LIBRARY
JAFFNA

ஐம்பொன்னாலான அழகுமிக்க மூர்த்தங்கள் இருக்கும் மண்டபம் – தேவமண்டபம், கண்கொள்ளாக்காட்சி தருவதாகும். பறங்கியருக்குப் பின் ஆங்கிலேயர் காலத்தில் கிடைத்த வழிபாட்டு அனுமதியின் போது நடைபெற்ற மலைபூசை ஆகாசவெளியில் இன்றும் நடைபெற்று வருகின்றது.

நாடொறும் ஆறுகால பூசை ஆகம விதிகளின்படி தவறாமல் நடைபெறுகின்றன. திருக்கோணேசப் பெருமானின் விழாக்களில் வெளிவாரியாக நடைபெறுவது ஆடி அமாவாசை விழாவாகும். கடலில் தீர்த்தமாடுவதற்கு பெருமான் எழுந்தருளும்போது, நகரிலுள்ள ஆலயங்களின் மூர்த்திகளும் தீர்த்தமாட அங்கே எழுந்தருளுவார்கள்.

ஆடி மாதம் போலவே, மகாமகத் தீர்த்தத் திருவிழா, பங்குனி மாதத்தில் பூங்காவன மற்றும் தெப்பத் திருவிழா, மார்கழியில் திருவெம்பாவை விழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி நாட்களில் ஸ்ரீ சக்கரபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது. ஆதிகோண நாயகர் திருக்கோயில் கற்கோயிலாகும். திருக்கோணேஸ் வரத்தின் தொல்புகழ் பாடும் தேவாரம், திருப்புகழ் தவிர பல புராணங்களும், பிரபந்தங்களும், கல்வெட்டுச் செய்திகளும் உள்ளன.

### திருக்கோணேஸ்வர ஆலய வரலாறு

இக்கோயிலின் வரலாறு 3287 ஆண்டுப் பழமை வாய்ந்ததாகும். இதற்கு திரிகூடம் என்றும் பெயருண்டு. சுவாமிக்கு விளக்கேற்றுவதற்குப் போதியளவு நெய்யும் திரியும்

கிடைப்பதற்கு வழிவகுத்தவர்கள், தாமரைத் தண்டின் நூலெடுத்து திரி செய்தார்கள். அந்த ஊர் இன்றும் "திரிதாய்" என்று வழங்குகின்றது.

போர்த்துக்கேயர் 1624ஆம் அண்டில் இத்திருக்கோயிலை பாழ்செய்துள்ளனர். அன்று அருணகிரிநாதர் மனமுருகிக் கண்ட தலத்தாறு கோபுரத்தழகைப் பறங்கியவர்களின் தளபதியும் பார்த்துருகியுள்ளான். அவன் தன் படையில் ஓவியம் வல்லானைக் கொண்டு அவற்றின் அழகை ஓரளவு வரைந்து எடுத்துக்கொண்ட பின்பே கோயிலைத் தரைமட்டமாக்க உத்தரவு பிறப்பித்தான். அந்தக் கோபுரத்தழகைக் காட்டும் சித்திரம் இன்றும் லிஸ்பன் நகரில் உள்ளது என்பர்.

சுதந்திரம் பெற்றபின் 1950ஆம் ஆண்டில், கோயில் இருந்த நிலத்தில் ஆலயம் அமைக்க முற்பட்டுக் காசியிலிருந்து சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்தார்கள். அக்காலத்தில் நகர சபையார் கிணறு தோண்ட முயன்ற போது மூன்றடி தோண்டிய வேளையில் சிவனருளோ என்று கண்டவர்கள் அதிசயிக்கும் வண்ணம் மாதுமையாள் சமேத கோணேசுவரப் பெருமானோடு, சந்திரசேகரர், பார்வதியார், பிள்ளையார், அஸ்திரதேவர் முதலாய தெய்வத் திருவுருவங்கள் வெளிப்பட்டன.

அவையாவும் அண்மைக் காலத்திலமைக்கப்பெற்ற திருக்கோயிலில் ஆங்காங்கே எழுந்தருளச் செய்யப்பெற்றுள்ளன. முன்னொரு காலத்திலேயே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோண மலையிலே உச்சியிலும், இடையிலும், அடிவாரத்திலுமாக மூன்று பெருங்கோயில்கள் இருந்தன என்பர்.

கோயிலை பறங்கியர் பாழ்படுத்திய வேளையில் பக்தர்களாகிய பாசுபதவிரதிகளும் பணியாளரும் பதைத்துருகித் திருக்கோயிலிலிருந்த திருவுருவங்களை எடுத்துச் சென்று அயலிலுள்ள கிணறுகளிலும் குளங்களிலும் பாதுகாப்புக்காக இட்டார்கள். அவர்கள் ஒரு திருவுருவத்தை அயலூரான தம்பலகாமம் என்னும் மருதவளம் நிறைந்த ஊரில் மறைத்து வைத்து மிகவும் இரகசியமாக வழிபாடு செய்து வந்தவர்கள்; அந்த இடத்தை ஆதிகோணநாயகர் கோயில் என வழங்கி வணங்கினார்கள். அது ஆதி கோணநாநயகர் ஆலயமாகவே பழைய கோணேசுவரர் ஆலயத்துக்குச் சொந்தமான மானியங்களிற் பெரும்பகுதி தம்பலகாமத்திற்குச் சேர்ந்தன. முதற்பராந்தக சோழனுக்கு அஞ்சிய பாண்டியன் இலங்கையில் பாதுகாப்புக்காகப் புகுந்திருந்த காலத்தில் தம்பலகாமத்தில் திருப்பணிகள் செய்ததாக வரலாறு கூறுகிறது.

## திருக்கோணேஸ்வர ஆலய சிறப்பு பார்வை

**அமைவிடம் :**

இலங்கையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள இயற்கை எழில் மிக்க நகரம் திருகோணமலை. இலங்கையின் மிகப்பெரிய நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்தில் கடலுடன் கலப்பதால் அப்பிரதேசம் இயற்கை வளத்துடன் சிறந்து

விளங்குகின்றது. அங்கு சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்றின் உச்சியிலே திருக்கோணேஸ்வரர் கோயில் உள்ளது. இது அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்ட புதிய கோயிலாகும்.

**தலச்சிறப்பு :**

குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் இத்தலம் அமைந்துள்ளது. திருக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென் கைலாயம், கோகர்ணம், திருகூடம், மச்சேஸ்வரம் என்பன இத்தலத்தின் பிறபெயர்கள் ஆகும்.

**தீர்த்தச் சிறப்பு :**

இக்கோயிலின் தீர்த்தம் பாவநாசம் எனப்படும். இங்கு தீர்த்தமாடுபவர்களின் பாவம் தொலைந்து விடும் என்பது ஐதீகம். சுவாமி மலையின் தெற்குப் பக்கத்தில் ஆழமான ஒரு கிணறாகப் பாவநாசத் தீர்த்தம் இப்பொழுது இருக்கின்றது.

**திருக்கோணேச்சர சிறப்பு**

அமைவிடம் இலங்கையின் கீழ்த்திசையில் அமைந்துள் இயற்கை எழில்மிக்க நகரம் திருகோணமலை. இலங்கையின் மிகப்பெரிய நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்திற் கடலுடன் கலப்பதால் அப்பிரதேசம் நீர் வளமும் நில வளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. அங்கு சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியமாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலே திருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. அது அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்ட புதிய கோயிலாகும்.

பண்டைய வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கோயில் ஒன்று சமுத்திர ஓரத்தில் அந்த மலையின் அடிவாரத்தில் இருந்ததென நம்பப்படுகின்றது. அது கி.மு. 306இல் நிகழ்ந்த கடற்கோளினாற் சமுத்திரத்தினுள் மூழ்கிவிட்டது. தெனன்று என்னும் வரலாற்றாசிரியர் எழுதிய இலங்கைச் சரித்திரம் என்னும் நூல் இவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறுகின்றது. ஆழ்கடலில் ஆமர்ந்திருக்குங் கோணேச்சரப் பெருமானுக்கு இன்றும் மலைப்பூசை ஒன்று செய்யப்படுவதை நாம் காணலாம். மலையின் அடியில் ஆழ்கடலுக்கு எதிரே மலைக்குகை போன்று பண்டைக் கோயிலின் மூலத்தானததின் ஒரு பகுதி இன்னமும் எஞ்சியிருக்கின்றது. அது பல்லவர் காலக்குகைக் கோயில் போன்றது. அக்கோயிலின் மிகுதி சமுத்திரத்தின் அடியில் உள்ளதென 1961இல் ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மக்வில்சன் என்பர் கூறியுள்ளார்.

இராவணன் தென் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலே தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இராவணன் தன் தாயாருக்குச் சிவலிங்கம் ஒன்று பெற விரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிண கைலாய புராணங் கூறுகின்றது. இதற்குச் சான்று

பகர்வது போன்று இம்மலைப் பாறையில் இராணவன் வெட்டு என்ற பெயருடன் மலைப் பிளவு ஒன்று இன்னமும் இருக்கின்றது. இராவணன் கிறிஸ்து யுகத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனுடைய காலத்துக்குப் பின் கடற்கோள் ஒன்று நிகழ்ந்தது ஏ்னறும் ராஜாவளிய என்னும் புத்த சமய வரலாற்று நூல் கூறுகின்றது.

கடற்கோளுக்குப் பின் மீண்டும் சுவாமிமலை உச்சியில் அமைக்கப்பட்ட கோயில் கி.பி. 7ம் நூற்றாண்டிற் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இதனையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், தாயினும் நல்ல தலைவர் என்னும் தேவாரத்தில் "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே என்று போற்றிப் பாடியுள்ளார். சோழர், பாண்டியர் ஆரியச் சக்கரவர்த்திகள் முதலானோர் இக்கோயிலை ஆதரித்தனர். குளக்கோட்டு மன்னன் குளந்தொட்டு வளம் பெருக்கித் திருப்பணிகள் பலவுஞ் செய்வித்தவன் என்பது வரலாறு. இவன் திருக்கோணேச்சர ஆயலத்துக்குத் திருப்பணி மட்டுமன்றிச் சோதிட முற்கூறலுடன் அமைந்த கல்வெட்டு ஒன்றினையுஞ் செய்வித்தான். அது கோட்டை வாயிலிலுள்ள கற் தூண்களிற் பதிக்கப்பட்டு இன்னமும் இருக்கின்றது. அதனை ஈண்டு நோக்குதல் சாலப் பொருத்தமானது.

முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே மன்னவபின் பொண்ணா ததனை யியற்றவழித் தேவைத்து எண்ணாரே பின்னரசர்கள் என்பது அக்கல்வெட்டு. குளக்கோட்டனின் திருப்பணியால் அமைந்த இவ்வாலயத்தைப் பறங்கியர் உடைப்பார்கள். பின்னர் அரசர்கள் இதனைப் பேணமாட்டார்கள் என்று இதன் எதிர்காலம் பற்றி இங்கு குறிப்பிட்டிருத்தல் வியப்புக்குரியது.

இக்காலத்திற் சிவராத்திரி தினத்திற் கோணேச்சரப் பெருமானுக்கு நகர்வலம் வருதல் என்னும் திருவிழா ஒன்று சிறப்பாக நடைபெறுகின்றது. அக்காலத்திலும் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்வாறாக 1624ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு நாளில் நகர்வலம் வருந் திருவிழா ஒன்று நடைபெற்றது. இதற்காக மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவாக அடியார்களுடன் கோயிலிலிந்து நகருக்கு எழுந்தருளினார். அவ்வேளையிற் போர்த்துக்கேயப் படைவீரர் பிராமணர்கள் போல வேடந் தாங்கிக் கும்பிடப்போவது போன்று கோயிலினுட் புகுந்தனர். அந்நேரத்திற் கோயிலின் உள்ளே பூசகர்கள் சிலரும் வேலையாளரும் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

கொன்ஸ்ரன்ரயின்டீசா என்பவனுடைய தலைமையிற் சென்ற இப்போர் வீரர்கள் எதிர்த்தவர்களை வெட்டிக்கொன்றுவிட்டு கோயிலிலிருந்த தங்க, வெள்ளி நகைகளையும் விலைமதிப்புமிக்க பிறபொருள்களையும் சூறையாடிக்கொண்டு சென்றனர். அதன் பின்னர் அடியார்கள் சில விக்கிரகங்களை அகற்றி மறைத்து வைத்தனர். போர்த்துக்கேயர் பீரங்கிகளுடன் மீண்டும் வந்து கோயிலை முற்றாக

அழித்தனர். போர்த்துக்கேயர் அழித்த கோயிலில் ஆயிரங்கால் மண்டபமும் பெரியதொரு தீர்த்தக் கேணியும் பிற மண்டபங்களும் இருந்தன என்பது அவர்கள் வரலாற்றுச் சான்றாக வரைந்து வைத்த படம் ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது. கொன்ஸ்ரன்ரயின் டீசா செய்த சிவத்துரோகத்துக்காக அவன் 1630ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொல்லப்பட்டான்.

**புதிய கோயிலின் வரலாறு** 1944ஆம் ஆண்டு திருகோணமலைக் கோட்டையினுள்ளே நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்தபொழுது விஷ்ணு மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன. 1956ஆம் ஆண்டு ஆடி மாதத்திற் சுவாமி மலைக்கு அண்மையிற் கடற்கரை வீதியருகே கிணறு ஒன்று வெட்டப்பட்டபொழுது மூன்று விக்கிரகங்கள் கிடைத்தன. வேறோர் இடத்தில் அகழ்ந்தபொழுது மேலும் இரண்டு விக்கிரகங்கள் கிடைத்தன. இந்த விக்கிரகங்கள் எல்லாம் 1952ஆம் ஆண்டிற் பிரதிட்டை செய்யப்பட்டன.

1950-07-03 அன்று கலாநிதி பாலேந்திரா அவர்களின் தலைமையிலே திருக்கோணேச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஆரம்பமானது. இச்சபையின் பெருமுயற்சியாற் பழைய கோயில் இருந்த இடத்தில் மீண்டுந் திருக்கோணேச்சரர் ஆலயம் அமைக்கப்பட்டு 1963-03-03 அன்று மகா கும்பாபிடேகம் நிறைவெய்தியது. பழைய கோயிலுடன் ஒப்பிடும்போது இது சிறிய கோயிலாகவே இருக்கின்றது.

**மூர்த்திச் சிறப்பு** இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கோணேச்சரர் இறைவி பெயர் மாதுமை அம்பாள். தலவிருட்சம் கல் ஆலமரம். இப்பொழுதுள்ள கோயிலை அடுத்து இம்மலையின் வட முனையிற் பாறையினுள் வேர் வைத்து இந்த ஆலமரம் செழிப்பாக வளர்ந்து நிற்கின்றது. சோழ நாட்டிலே பழையாறை என்பது கி.பி. 831இல் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது.அங்கு குமராங்குசன் என்னும் அரசன் அப்பொழுது ஆட்சி செலுத்தினான். இவனுடைய மகள் சீர்பாததேவி. நகுலேச்சரத் தலவரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மாருதப்புரவீகவல்லி என்பவளுக்கு நரசிங்கன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் சீர்பாததேவியைத் திருமணஞ் செய்தான். இவர்கள் இவருவரும் தம் சுற்றத்தாருடன் இலங்கைக்கு வருவதற்கு சோழ நாட்டிலிருந்து கப்பலிற் புறப்பட்டனர். அப்பொழுது சீர்பாததுேவி இலங்கையின் நாட்டு வளத்தைப் பார்க்க விரும்பினாள். எனவே கப்பல் இலங்கையின் கிழக்குக் கரையோரமாகப் பயணஞ் செய்தது.

கப்பல் திருகோணமலையை அண்மித்தபொழுது திருக்கோணேச்சரந் தென்பட்டது. அரசி அவ்விறைவரை வணங்கினாள். அதே நேரம் கப்பலும் நங்கூரம் இட்டது போன்று நிலையாய் நின்றது. அரசி மிகவுந் துயரடைந்து விக்கினங்களை அகற்றுபவரான விநாயகரைத் தொழுதாள். பின்னர் படகோட்டியைக் கப்பலின் கீழே சென்று பார்க்குமாறு பணித்தாள். கப்பல் தரையிற் பட்டுவிட்டதென்றே அவள் கருதினாள். எனினும் அங்கு

தரை இருக்கவில்லை. ஆயின் கடலில் மிகுந்த ஆழத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்று இருந்தது. அதனை அவள் கப்பலுக்குள் எடுத்த பின்னர் கப்பல் மீண்டும் ஓடத் தொடங்கியது. இவ்வாறாகக் கடற்கோளால் கீழே சென்ற புராதன ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் இவ்வளவு மகிமை உடையதென்றாற் கோணேச்சரப் பெருமமானின் மகிமையைக் கூறவும் வேண்டுமா?

திருகோணேச்சரப் பெருமான் திருவுலாவுக்கு எழுந்தருளிய பின்னரே போர்த்துக்கேயர் கோயிலினுட் புகுந்தனர் என்று முன்னர் கூறப்பட்டது. எனவே அந்த விக்கிரகங்கள் காப்பாற்றப்பட்டிருத்தல் வேண்டும். அவை இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட விநாயகரும் சோமாஸ்கந்தருமாக இருக்கலாம். இந்த விநாயகர் விக்கிரகம் மிகவும் சிறப்பான அம்சங்களைக் கொண்டுள்ளது. பழைய கோயிலின் பல விக்கிரகங்கள் தற்செயலாகக் கிடைத்தன என்பது இறைவனின் செயல். இதுவும் திருக்கோணேச்சரப் பெருமானின் மூர்த்திச் சிறப்பினையே புலப்படுத்துகின்றது.

**தலச்சிறப்பு** இந்தத் தலத்தின் சிறப்புக் காரணமாகவே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோணச்சரப் பெருமான் மீது தேவாரத்திருப்பதிகம் பாடினார். இத்தலத்தின் மகிமையை அடியார்கள் சொல்லக்கேட்டு அவர் இப்பதிகத்தைப் பாடினார். அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழ் ஒன்றில் “நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் திருக்கோணாமலை தலத்தாறு கோபுர” என்று இத்தலத்தை வருணித்துள்ளார். இங்கு ஆறுகாலப் பூசைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. சிவராத்திரிக் காலத்திலே திருக்கோணேச்சரப் பெருமான் நகரத்தினுள்ளே திருவுலாவாக எழுந்தருளுதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரைநடையிலும் கூறுகின்றது. சீர்பாதகுல வரலாறு மட்டக்களப்பு மான்மியம் ராஜாவளிய மச்சபுராணம் திருக்கோணாசலப் புராணம் இலங்கைச் சரித்திரம் (தெனன்று) தட்சின கைலாய புராணம் திருக்கோணமலைத் திருவுருவங்கள் குடுமியாமலைச் சாசனம் திருக்கோணமலைக் கோட்டை வாயிற் கல்வெட்டு முதலியன இக்கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன. திருக்கோணேச்சரத் தேவாரத் திருப்பதிகம் கோணேஸ்வரர் குறவஞ்சி திருக்கோணேஸ்வரர் அகவல் திருக்கோணமலை அந்தாதி முதலியன இக்கோயில் மேல் எழுந்த இலக்கியங்களாகும்.

## திருஞானசம்பந்தர் அருளிய திருக்கோணமலைத்திருப்பதிகம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணிவிடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந்தாரே.

*சிவபெருமானின் வலத் திருவடியில் வீரக்கழலும், இடத் திருவடியில் சிலம்பும் ஒலிக்கின்றன. அவர் பாம்பணிந்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். திருநீறு அணிந்த திருமேனியர். மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவர். இடபக்கொடி உடையவர். சந்தனக் கட்டைகளும், கரிய அகில் கட்டைகளும், மாணிக்கக் கற்களும் அளவின்றிக் கரையில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் திருக்கோண மாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.*

கடினெ வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுத லவளொடுமுடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமாமலையமர்ந் தாரே.

விரைவாகப் பாய்ந்து வந்த யானையின் தோலை உரித்து திருமேனி மேல் போர்த்திக் கொண்டவர் சிவபெருமான். அவர் பெண் யானை போன்ற நடையை உடையவளாய், வளையல்களை அணிந்தவளாய்ப் பிறை போன்ற நெற்றியினை யுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். பிறர் கொடிது என்று அஞ்சத்தக்க அலைகளுடைய ஒலிக்கின்ற கடல், முத்துக்களைச் சுமந்து மக்களுக்கு வழங்கும் வளமைமிக்க திருக்கோண மாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளு கின்றார்.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக மாகமுன் கலந்தவர்மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந் தாங்கிய மேருவெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே.

*சிவபெருமான் குளிர்ச்சியான இளமையான சந்திரனையும், பசுமையான தலையையுடைய பாம்பையும், படர்ந்த சடைமுடியில் அணிந்துள்ளார். கனிபோன்ற சிவந்த வாயையுடைய உமாதேவியைச் சிவபெருமான் ஒரு பாகமாக உடையவர். மேரு மலையை வில்லாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கொண்டு, அக்கினியைக் கணையாகக் கொண்டு முப்புரத்தை அழித்த ஆற்றலுடையவர். அப்பெருமான் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளு கின்றார்.*

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலனார் கமலமார்பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனுமிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமாமலையமர்ந் தாரே.

*இறைவர் பெருக்கெடுத்து வந்த கங்கை நதியின் வேகத்தைக் குறைத்து அதனைச் சடையில் தாங்கியவர். அழகிய மன்மதன் சாம்பலாகுமாறு நெற்றிக்கண்ணால் விழித்தவர். பின் அவன் தேவி வேண்ட அவனை உயிர்ப்பித்து அவளுக்கு மட்டும் தெரியும்படி அருள் செய்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். தாமரை போன்ற திருவடிகளை உடையவர். ஆரவாரத்துடன், செழுமையான முத்துக்கள், செம்பொன், இப்பி இவற்றைத் திரளாக அலைகள் கரையிலே சேர்க்கத் திருக்கோணமலை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.*

தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே.

*தாயைவிட நல்ல தலைவர் என்று அடியார்கள் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடுவர். அவர் அடியார்களின் வாயிலும், மனத்திலும் நீங்காத மாண்புடையவர். பல கோலங்களை உடையவர். தம்மை வழிபடும் தொழிலுடைய அடியவர்கள் பால் நோய், பிணி முதலியன தாக்காவண்ணம் காப்பவர். மார்பில் முப்புரிநூல் அணிந்தவர். இவ்வுலகில், திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ விளங்கும் திருக்கோணமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.*

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ் செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை யமர்ந்தாரே.

*பக்தி பெருகும் நல்ல மனத்தால் அன்பு பெருக வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த காலனை, இறை வழிபாடு வினைப்பலனைச் சாராமல் காக்கும் என்ற சைவக் கொள்கைக்கு முரண்படாவண்ணம் உதைத்துப் பாலனுக்கு அருள்புரிந்த செம்மையான திறமுடையவர் சிவபெருமான். ஆன்மாக்கள் ஆகிய நம்மை ஆட்கொள்பவர். அப்பெருமான் விரிந்துயர்ந்த மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செருந்தி, செண்பகம், முல்லை ஆகியவை விளங்கும் சோலைகள் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.*

7.

*கிடைக்கப்பெறவில்லை*

௧.
எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா லேத்திட வாத்தமாம்பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை தன்னருட்பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர் கோணமா மலையமர்ந்தாரே.

*கயிலைமலையை எடுத்த இராவணனின் செருக்கைத் தம் திருப்பாதவிரலை ஊன்றி அழித்தவர் சிவபெருமான். பின் அவன் ஏத்திப் போற்ற விருப்பத்துடன் வெற்றி வாளும், நீண்ட வாழ்நாளும் அருளியவர். செல்வத்தோடு கூடிய பிறப்பும், இறப்பும் அறியாதவர். சிவனை நினையாது தக்கன் செய்த வேள்வியைத் தடுத்தவர். வனப்பு மிகுந்த உமாதேவியை ஒருபாகமாக வைத்தவர். உயிர்களிடத்துக் கருணைகொண்டு தன்னருட் பெருமையும், வாழ்வும் கொடுத்தவர். அத்தகைய பெரும்புகழையுடைய சிவபெருமான் திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.*

அருவரா தொருகை வெண்டலையேந்தி யகந்தொறும் பலியுடன்புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப் பெருங்கடல் வண்ணனும்பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா யுயர்ந்தவர் பெயர்ந்தநன்மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமா மலையமர்ந்தாரே.

*அருவருப்பு இல்லாமல் பிரமனின் வெண் தலையைக் கையிலேந்தி வீடுகள் தோறும் சென்று பிச்சை ஏற்று உண்ணும் பெருமையுடையவர். சீர்மை பொருந்திய பெருங்கடலில் துயிர்கொள்ளும் திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் அறியாவண்ணம் ஒளியுடைய பெரிய நெருப்புப் பிழம்பாய் உயர்ந்து நின்றவர். திருமால் சிவபெருமானை ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு அர்ச்சிக்க, ஒரு பூக்குறைய, அதற்காகத் தாமரை போன்ற தம் கண்ணையே இடந்து அர்ச்சனை செய்யக் குருவாய் விளங்கியவர். அயடிவர்கள், ஒலிக்கின்ற வீரக்கழல்கள் அணிந்த தம் திருவடிகளை வணங்கும் வண்ணம் திருக்கோணமலையில் வீற்றிருந்தருளுகின்றார்.*

10.
நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரு நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான் மெல்லிய லொடுமுடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங் கோணமா மலையமர்ந்தாரே.

*நின்றுண்ணும் சமணர்களும், இருந்துண்ணும் புத்தர்களும் சிவபெருமானைப் பற்றி நெறியல்லாதவனவற்றைப் புறங்கூறுகின்றனர். சிவபெருமானோ நஞ்சுண்டு தேவர்களைக் காத்த பெருமையுடையவர். மெல்லியலான உமாதேவியை ஒரு*

*பாகமாகக் கொண்டவர். கடல் சூழ்ந்த அம்மலையில் மணம் வீசும் மல்லிகைச் சோலை விளங்கக் கடலலைகள் கரையில் மோதுகின்றன. கடற்சோலைகளின் மணம் வீசும் திருக்கோணமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.*

11.
குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து முரைப்பவர் கேட்பவருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

*குற்றமில்லாத குடிமக்கள் வாழ்கின்ற ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை, கற்றுணர் ஞானமும், கேள்வி ஞானமும் உடைய சீர்காழி வாழ் மக்களின் தலைவரான சிவஞானக் கருத்துடைய ஞானசம்பந்தர் செந்தமிழில் அருளிய இப்பதிகத்தை உரைப்பவர்களும் கேட்பவர்களும் உயர்ந்தோர் ஆவர். அவர்களுடைய சுற்றத்தாரும் எல்லா நலன்களும் பெற்றுத் தொல்வினையிலிருந்து நீங்கப் பெறுவர். சிவலோகத்தில் பொலிவுடன் விளங்குவர்.*

**அருணகிரிநாதர் அருளிய திருகோணமலைத் திருப்புகழ்**

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான
விலைக்கு மேனியி லணிக்கோவை
மேகலை தரித்த வாடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியே மயலூறி

***பொழிப்புரை :***

உடலை விற்று வாழும் பெண்கள் தங்கள் உடம்பில் ஆடைகள் அணிந்து அணிகலன்கள் பூண்டு மேகலை என்று சொல்லப்படுகிற ஒட்டியாணம் கட்டி உடம்பை அழகுபடுத்தி மினுக்குகின்றார்கள். அவர்களுடைய காம இச்சையில் மயங்கினேன்.

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியே யுழைத்தேவி டாய்படு கொடியேனை

*பொழிப்புரை*

அந்தக் காம மயக்கத்தினால் என்னை இந்தப் பூமியிலுள்ளவர்கள் இவனும் ஒரு காமியெனை என் கண் முன்னே நின்று இகழவும் நான் அவமானத்தைப் புறந்தள்ளி இந்த உடம்பின் காமவேட்கையால் மீண்டும் காமதாகந் தணியாத கொடியவனானேன்.

கலக்க மாகவே மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு மொரு வாழ்வே

***பொழிப்புரை :***

காம கலக்கத்தினால் மலஞ்சோறும் இந்த உடம்பின் மிகுந்த நோய்களுக் காளாகித் தவிக்காமல், உன்னைக் கவிமாலையால் போற்றித் துதிக்கும் என்னை ஈடேற்ச் செய்கின்ற ஒப்பற்ற பெருவாழ்வுடையவனே!

கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயேனை யருட்பார்வை யாகவே
கழற்கு ளாகவே சிறப்பான தாயருள் தரவேணும்

***பொழிப்புரை :***

*மேலான மோட்சகதி அருளுகின்ற தலைவனாகிய கோணேசப் பெருமானே! உன்னைத் தேடித்தேடி உன்புகழையே பாடுகின்ற நாயிற் கடைப்பட்ட என்னையும் உனது அருட்பார்வையாகிய கருணையினால் உன் திருவடிப் பேறடைவதற்கு அருள்புரிய வேண்டும்.*

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே

***பொழிப்புரை :***

*தென்கயிலை மலையின் தலைவனாகிய உன்னையே இச்சித்து சிவகாமியா யமர்ந்துள்ள மாதுமையாளின், திருக்குமாரனாகிய ஆறுமுகங் கொண்ட சண்முக தேசிகனே! அழகிய வடிவுடைய குறமகளாகிய வள்ளி அம்மையாருக்கு இன்பத்தைத் தருகின்றவனே!*

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு முருகோனே

*பொழிப்புரை :*

*வசிட்டர், காசிபர், தவப்பேறுடைய யோகியர்கள், அகத்திய மா முனிவர், இடைக் காட்டுச் சித்தர், நக்கீரன் என்பவர்கள் பாடிய பாக்களின் தத்துவப் பொருளையே திருமேனியாக கொண்டு எழுந்தருளுகின்ற முருகப் பெருமானே!*

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலைத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

*பொழிப்புரை :*

*நான்கு வேதங்களையும் நிலைக்கச் செய்கின்ற மேலான அந்தணர்கள், திருகோணமலைத் தலத்தில் உயர்ந்து விளங்கும் கோபுர வாசலின் நின்று பாடும் அனுபூதிப் பாடலின் பொருளாக விளங்கி வருகின்றவனே!*

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே.

*பொழிப்புரை*

*புண்ணிய பாவங்களுக்கேற்ப நிகழுகின்ற ஏழு பிறப்புக்களையும், தனது திருக்கரத்திலேந்திய, கடல் கோள் போன்று அழிக்கும் ஒப்பற்ற வல்வேலினால் பொடிப் பொடியாகும்படி செய்து, நினைத்த காரியங்கள் எல்லாம் அனுகூலமாக முடியும்படி அருள்புரிகின்ற பெருமாளே!*

## திருக்கோணேஸ்வர நூல்கள்

### திருக்கோணாசல வைபவம்

இந் நூல் திருகோணமலை ஸ்ரீமான் வே.அகிலேசபிள்ளை அவர்களால் 1889ஆம் ஆண்டில் சத்தியரூபமாக இயற்றப்பட்டது.

திருக்கையலாச மலையிலே சிவபெருமான் அனந்தகோடி சூரியப் பிரகாசமுள்ள சிங்காசனத்தின் மேலே தமது அருட்சக்தியாகிய உமாதேவியாரோடு இடப வாகனத்தின் மேல் வீற்றிருந்தருளியிருக்கிறார்.

அப்போது பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களும், கணநாதர்களும் சிவபெருமான் முன்பு வந்து, அட்டாங்கமும் பூமியிற்றோயும்படி விழுந்து திருப்பாதங்களை நமஸ்கரித்து எழுந்து நின்றார்கள்.

சிவபெருமான் அவர்கள் மீது திருவிழிக் கடை பரப்பி அனுக்கிரகம் பாலித்தார். அதன் பின்பு சிவபெருமான் சகல தேவர்களையும் நோக்கி, தேவர்களே! பிரமாவுக்கு படைத்தல் தொழிலையும், விஷ்ணுவுக்கு காத்தற் தொழிலையும், உருத்திரனுக்கு அழித்தல் தொழிலையும் ஆதிசேடனுக்கு பூமியைத் தாங்கும் தொழிலையுங் கொடுத்தோம் என்று சொல்லியருளினார்.

**கோணேசர் கல்வெட்டு**

'கோணேசர் கல்வெட்டு' என்கின்ற இந்த வரலாற்று நூல், திருக்கோணமலையைச் சேர்ந்த கவிஞர் இராஜவரோதயம் அவர்களால் 16ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது பாடல்களையும், உரைநடைப் பகுதிகளையும் கொண்டமைந்திருக்கிறது.

அந்த நாட்களில் அரசர்கள் தங்களது திருப்பணிகள், கட்டளைகள் போன்றவற்றை சாசனங்களாக குறித்து வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட சாசனத்தை ஆதாரமாகக் கொண்டு இலக்கியங்கள் உருவாக்கப்பட்டால் அது 'கல்வெட்டு' என அழைக்கப்பட்டது.

திருக்கோணேச்சர ஆலயத்துக்கு திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன், ஆலயம் பற்றியும், அதனை நிர்வகிப்பது பற்றியும், கோயிற் தொழும்பாளர்கள் கடமைகள் பற்றிய செய்திகளையும் உள்ளடக்கி 'பெரியவளமை பத்ததி' என்னும் செப்பேட்டில் பொறித்து வைத்திருந்தார். அச்சாசன விடயங்களை அடிப்படையாக வைத்து அதைத் தொகுத்தும், விரித்தும் கவி இராஜவரோதயரால் உருவாக்கப்பட்டதுதான் கோணேசர் கல்வெட்டு.

இந்நூல் மூலம் திருக்கோணேச்சரத்தின் வரலாறு, அவ்வாயலத்துக்கு குளக்கோட்டு மன்னன் செய்த திருப்பணிகள், திருகோணமலை வன்னிமைகள் பற்றிய செய்திகள், அக்காலத்து திருகோணமலைச் சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்கள் என்பனவற்றைப் பற்றி நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. முக்கியமாக கோயில் தொழும்பு செய்வோர் பின்பற்றவேண்டிய விதிமுறைகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், கோணெசர் ஆலயத்துக்குரிய திரவிய இருப்பு என்பன பற்றி விரிவாகச் சொல்கிறது இந்நூல். திருகோணமலையின் வரலாற்றுத் தொன்மைக்கான ஆதாரங்களில் இந்நூல் முக்கிய இடம் வகிக்கிறது.

---

*(16ம் பக்கத் தொடர்ச்சி.....)*

02-02-2015 அன்று மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நிறைவு பெற்றது. தமிழகக் கலைஞர்களும் உள்ளூர் கலைஞர்களும் தம் அற்புதமான கைவண்ணத்தில் மிகச் சிறப்பாக கோவிலை உருவாக்கியுள் ளார்கள். சைவத் தமிழர் பண்பாட்டுடை அணிந்து மட்டும் ஆலய உட்பிரகாரம் வழிபாடு செய்யுமாறு பக்தர்கள் வேண்டப் பட்டனர்.

மிக ஒழுங்காக கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

# யாழ்ப்பாணம் - திருநெல்வேலி ஞானப்பிரகாசர்

"திருவண்ணாமலை ஞானப்பிரகாசர்" என்ற பெயரால் வழங்கப்பெறும் இவர் ஈழநாட்டில் (ஸ்ரீலங்காவில்) யாழ்ப் பாணத்திலுள்ள வீணாகானபுரம் சாலி வாடீசுர (திருநெல்வேலி) என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவர் காலம் 1550 முதல் 1610 அளவில் இருக்கக்கூடும்.

இவர் திருப்புகலூரை அடைந்து, ஆதி சைவராகிய பெரிய அண்ணாசாமி குருக் களிடம் தீட்சை பெற்றார். பின்னர், சில காலம் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அங்கிருந்து கௌடதேயமடைந்து அவ் விடத்தில் பிராமண சந்நியாசி ஒருவர் தம் சீடர்களுக்குக் கற்பித்து வந்த தர்க்க மீமாஞ்ச வேதாந்த சாத்திரங்களை அருகேயிருந்து கண்ணுற்றும் கேட்டும் நாள்தோறும் அவற்றைக் குறித்துச் சிந்தித்து வந்தார். ஒருநாள் அவ்வாசிரியர், இவரை நோக்கி, நீவிர் யாவீர்? நீர் இச் சாத்திரப் பாடங்களின் சாரத்தையுற்றுக் காலந்தோறும் கவனிப் பதில் நன்கு புலப்படுகின்றனவா?" என்று வினவினார். ஞானப்பிரகாசர் கூறிய விடை களைக் கேட்டு ஆச்சரியமுற்று அத்துறவி யார் இவருக்கு அச் சாத்திரங்களை முற்றும் கிரமமாய்க் கற்பித்து வந்தார். ஓராண்டுக்குள் ஞானப்பிரகாசர் அச்சாத்திரங்கள் அனைத் திலும் பெரும் புலமை பெற்றார்.

பிறகு, ஞானப்பிரகாசர் திருவண்ணா மலையை அடைந்து, அங்கிருந்த (இப்போது குன்றக்குடியில் உள்ள) ஆதீனத்து அக் காலத்து மடாதிபதிகளிடம் சந்நியாசம் பெற்று, சிவ ஆகமங்களை ஓதி உணர்ந்தார். பின்னர் இவர் சிதம்பரம் அடைந்து பல் லாண்டுக்ள அங்கேயே தங்கி, சமய சாத்திர நூல்கள் பலவற்றை வடமொழியில் இயற்றினார். இவர் தங்கியிருந்த மடத்திற்கு அடுத்த நிலத்தில் இருந்த நிதிக் குவையைக் கொண்டு மிகப் பெரியதொரு திருக் குளமும் அதன் அருகில் திரு மடமும் அமைத்தார். இவை ஞானப் பிரகாசர் குளம் என்றும் ஞானப்பிரகாசர் மடம் என்றும் சிதம்பரத்தில் கனகசபை நகர் அருகே இன்றும் நின்று நிலவுகின்றன.

இவர் இயற்றிய பல நூல்களுள், இப் போது கிடைப்பது சித்தியார் சுபக்கவுரை மட்டுமே. இதன் இறுதியில் இவரைப் பற்றி ஒரு பாடல் காணப்பெறுகிறது :

*"சொல்லில் நாவில் துரிசறும், சோத்திரத்து*
*ஒல்லமேற் சிவஞானம் உதித்திடும்,*
*செல்ல மெய்அரு ணந்திசெய் சித்திக்கு*
*நல்ல ஞானப்ர காசன் நவிற்றுரை".*

இக்கட்டுரைக்கு ஆதாரம் : தமிழ் இலக்கிய வரலாறு : 16ம் நூற்றாண்டு. பாகம் 3, பப: 62-69. ஆசிரியர்: மு. அருணாசலம்.

# கல்வியின் ஒரு சகாப்தம் கனகசபாபதி

**திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்**

"இவர் எனது குரு. ஒரு காலத்தின் மலர். மகாஜனாவில் படித்த மாணவர்களின் வீட்டு வாயில் தோறும் விலங்கியல் என்ற பூரண கும்பத்தைப் பொலிவாக வைத்தவர். புன் முறுவல் பூத்த குளிர்ந்த பார்வையுடன் தான் சென்ற இடமெல்லாம் கல்விச் சேவையைச் சிறப்புடன் செய்த சீமான். அதிபரான போதிலும் செய்யும் கருமத்தில் செம்மை காட்டியவர். கடமை பெரிதென்று காலம் பார்க்காது உழைத்த மகான். நம் முற்றத்துப் பூக்காடு. கனடா தேசத்தில் நிறைந்த புகழ் படைத்துயர்ந்த முத்து. தெளிவு பெற்றுயர்ந்து விரிவு பெற்றுச் செல்லும் சிந்தனையாலும் ஓய்விலாத் தேடலாலும் அருமையாக எழுதும் அழகர். விண் தொட நிமிர்ந்த மனிதர். பல அரங்கு களை அணி செய்த தலைவர். சொல்லுவ தெல்லாம் பயனுள்ள சொல்லாய்ச் சொல்லி வந்ததால் இன்று எழுதுவதெல்லாம் பயன் உள்ள எழுத்தாய் ஆக்கியவர்."

என்று திரு.ச.பொ.கனகசபாபதி அவர்களின் "திறவு கோல்" என்ற சேமமடு பதிப்பக நூலின் பின்புற அட்டையில் எழுதும் பாக்கியம் 2008ம் ஆண்டு எனக்குக் கிடைத்திருந்தது.

2014ம் ஆண்டின் இறுதியில் அந்த மகான் தொலைவு மிக்கவழி நடந்தார் என அறிந்தோம். அவரது மறைவு கேட்டு நாங்கள் மனம் இடிந்தோம். வானம் இருண்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் "வந்து குவிந்து வளரும் இளையவர்கள் சிந்தை தெளிந்து திரு மனிதர் ஆம்படிக்காய் ஆண்டாண்டு காலம் அரைக்கணமும் தாழாது, வேண்டும் பணிகள் எவையும் விரைந்தெடுத்த" காலம் ஒன்றிருந்தது. அந்தப் பொற்காலத்தின் அதிபர் திரு. தெ.து.ஜெயரத்தினம் அவர்கள் அக்காலத்தின் புகழ்பூத்த ஆசிரிய குழாத்தில் முக்கிய மானவர் திரு.ச.பொ.கனகசபாபதி அவர்கள்.

கிரேக்க நாடகாசிரியர் சோபோகிளிஸ் அவர்கள், அன்ரிகனி என்ற தனது உலகப் புகழீட்டிய நாடகத்தில் சொல்வார்.

**மனமகிழ்வின் பெரும்பாகம் மெய்யறிவு ஒன்றே**
**சிதையாத இறைபக்தி காத்திடவே வேண்டும்**
**தற்பெருமை மிக்கவர் தம் பெருந் சொற்கள் என்றும்**
**பேரிடிகளால் முற்றும் தகர்த்து விடப்படுமே.**
**முதுமை நிலை எய்தியநல் மூத்தோரே நீங்கள்**
**பண்புடைமை கொண்டோரை அறிவுடையோராக்குங்கள்"**

இயல்பாகவே பண்புடைமை கொண் டோர்கள் அறிவுடையோராகியபோது சமுதாயம் பெரு நன்மை பெற்றது.

1957ம் ஆண்டு தமிழ் நாட்டின் Madras residency தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டு பட்டதாரியாக வெளியேறிய கனக சபாபதி அவர்களைத் தனது கல்லூரியில் உள்வாங்கிக் கொண்டார். "பொறுக்கி எடுக்கும்" இயல்பு கொண்ட ஜெயரத்தினம் தோற்றத்தில் உயரமாக இருந்த கனகசபாபதி அவர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மாணவர் மனங்களில் உயரத் தொடங்கினார். கல்லூரியில் அவர் 'லீவு' எடுப்பதே

இல்லை. 'விபத்து' ஒன்றில் அகப்பட்டுக் காலில் முறிவு ஏற்பட்டிருந்த காலம் மட்டுந்தான் அவர் கல்லூரிக்கு வராத காலம். ஒரு நாளாவது அவர் வகுப்புக்கு வராமல் விட்டது இல்லை. ஒரு நாளாவது மணி அடித்த பின் ஒரு நிமிடம் பிந்தி வந்தது இல்லை. இவை மறைந்து போன ஒருவரைப் பற்றி மிகைப்படுத்திக் கூறும் விடயங்கள் அல்ல. மிகமிக உண்மை யான விடயங்கள்! ஒவ்வொரு மாண வரிலும் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொள்வார். விடுமுறை காலம் முழுவதும் 'விலங்கியல்' பாடத்துக்கு மேலதிக வகுப்புக்கள் நடக்கும். மகாஜனாவின் விலங்கியல் பெறுபேறு உச்சமடை வதைப் பார்த்து மலையகம் உட்பட நாட்டின் பல பாகங்களிமிருந்து மாண வர்கள் மகாஜனாவை நோக்கிப் படை எடுக்கத் தொடங்கினர். பலர் விடுதியில் தங்கிக் கற்றனர்.

எப்போதும் வெள்ளை உடையில் தோற்றம் தரும் அவர் மாணவர் ஒழுங்குப் பொறுப்பாசிரியராக இருந்த போதிலும், மாணவர்களோடு ஒரு விதத்தோழமை யோடு பழகுவார். "யார் ஓய்வு நேரத்தில் நூலகத்துக்குப் போகாமல் இருக்கிறார், யார் யாரோடு கதைக்கிறார், யார் யாருக்குக் கடிதம் கொடுக்கிறார் என்று எல்லா விடயங்களையும் மணந்து பிடித்து விடுவார். பிறகு ஒரு புன்னகையோடு ஆற்றுப்படுத்தி விடுவார். எனக்கு அவர் ஆசிரியராக இருந்த நாற்பத்தைந்து வருடங்கள் கடந்து விட்ட பிறகும் கனடாவில் இருந்து அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வார். "கோகிலா இப்போது என்ன புத்தகம் வெளியிட ஆயத்தம் செய்கிறீர்?" என்று கேட்பார். அத்தகைய தொடர்பை அவர் ஏராளமான மாணவர்களோடு தனது இறுதிக் காலம் வரை பேணி வந்தார் என்பது ஆச்சரியப்படத்தக்க விடயம். அவரது தொடர்பாடல் திறன் எல்லையற்று விரிந்திருந்தது. அதுவே அவரை மகிழ்வுடன் வைத்திருந்தது.

"நேர்த்தி" என்பது அவருக்கு மறு பெயர் எனலாம். செய்முறைக் கொப்பியில் நாங்கள் கீறும் படங்களுக்கு அவரிடம் கையெழுத்துப் பெறுவது மிகவும் சிரமம். "இந்த நரம்பு இப்படி வராதே" என்பார். அதைத் திருத்தினால் இன்னொரு சிறு தவறு அவரது கண்ணில் பட்டுவிடும். பதின்னாலு வருடங்கள் மகாஜனாவில் ஆசிரியப் பணி புரிந்த பின் பதவி உயர்வு பெற்று புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு அதிபராகச் சென்றார். அங்கும் தன் ஆளுமையால் புத்தூர் மக்களைக் கவர்ந்து திரும்பவும் 1976இல் மகாஜனாவுக்கு அதிபராக வந்தார். மகாஜனா அக்காலத்தில் பல உயர்வுகளைக் கண்டது. நாட்டைவிட்டு நீங்கிய பின்னர் அவர் பல சவால்களைச் சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக மனைவி யினதும், மகனதும் இழப்பு அவரைப் பெரிதும் பாதித்தது. ஆயினும் மகன் மாறன் நினைவாக அவர் மாறன் மணிக்கதை களைத் தொடர்ந்து எழுதி வந்தார்.

மகாஜனாவில் அவர் பணியாற்றிய காலத்தில் அவரது சிறந்த உரைகளை நாம் மாணவர் ஒன்று கூடலில் கேட்போம். அருளம்பலம் இல்லத்துக்கான நாட கங்களை அவரே நெறியாள்கை செய் வதைப் பார்த்திருப்போம். அவரது மிகப் பரந்த வாசிப்பும், மலைபோன்ற அறிவும் அவர் கற்பிக்கும் போது புலனாகும். ஆயினும் அவருக்குள் மறைந்திருந்த

உன்னத எழுத்தாளரை நாம் அடையாளம் காணவில்லை.

கனடாவில் தான் அவருடைய எழுத் தாற்றல் வெளிவரத் தொடங்கியது. மாறன் மணிக்கதைகள் இரண்டாம் பாகத்தைத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் கள வெளியீடாக இங்கு வெளியிடும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது. இயற்கை முழு வதையும் அணைத்துக் கொள்ளும் தன்மை அக்கதைகளில் இருந்தது. சுதந்திர சமூ கத்தில் பிள்ளைகளைப் பொறுப்புடன் வாழத் தயார் செய்யும் கதைகள். "பிள்ளை களை நோக்கி ஒரு நந்தவனம் வருகிறது" என்று அந்நூலின் முன்னுரையில் நான் குறிப்பிடடேன். 2004இல் அந்நூல் வெளி வந்து போது அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டிருந்த பிள்ளைகளுக்குக் "கதை சொல்லல்" என்ற வெளிப்பாட்டுச் சிகிச்சை செய்யவும் அது பயன்பட்டது. ஆசிரியர் ஒருவரின் நூலுக்கு மாணவர் முன்னுரை எழுதுவது எல்லோருக்கும் கிடைக்காத பேறு!.

திரு. கனகசபாபதி அவர்களின் ஆளுமையில் இயல்பாக ஒரு நகைச்சுவை உணர்வு உண்டு. விஞ்ஞான விடயங்களை வாழ்வியல், கலை, இலக்கியம், நகைச் சுவை, எல்லாம் சேர்த்துக் குழைத்துச் செழிப்பாக எழுதும் அவரது பாங்கு மிகவும் நயக்கத்தக்கது. 2008இல் அவரது "மனம் எங்கே போகிறது?" என்ற உளவியல் சார் கட்டுரைத் தொகுதியையும் கலை இலக்கி யக்களமே வெளியிட்டது. அந்த நூலிலே அவர் எழுதினார் "எனது அபிமானத்துக்குரிய மாணவியும், பெரும்புகழ் வாய்ந்த எழுத் தாளரும், கல்வியாளருமாகிய கோகிலா தன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு இத்தனை நேர்த்தியாகச் செய்துள்ளார்." அப்படி ஒரு வார்த்தை அவரிடம் இருந்து வந்தது எனது வாழ்வின் அர்த்தம் நிறை வேறிய திருப்தியை எனக்குத் தந்தது. ஏனெனில் நேர்த்தியின் மறுவடிவம் அவர் 2008இல் சேமமடு பதிப்பக வெளியீடாக வந்த 'திறவுகோல்' என்ற நூலையும் நாங்கள் கொழும்பில் வெளியிட்டோம் 2010இல் எனது அறுபதாவது அகவை நிறைவின் போது நிகழ்வுகளை அவர் பாதம் பணிந்து தொடங்கும் வாய்ப்பையும் பெற்றேன்.

வயது முதிர முதிர அவரது எழுத் தாற்றல் மேலும் மேலும் செழுமை பெற்று வந்தது. "எம்மை வாழவைத்தவர்கள்" என்று அதிபர்கள் பற்றி அவர் எழுதிய நூல் கல்விச் சரித்திரத்தில் மிக முக்கிய மான நூல். அத்துடன் "மரம், மாந்தர், மிருகம்" என்ற நூலும் வெளிவந்தது. அந்த இரு நூல்களுக்குமான அறிமுக விழா சிட்னியில் நடைபெற்ற போது அங்கும் உரையாற்றும் பாக்கியம் பெற்றேன். ஆயினும் அவ்விழா வுக்கு அவர் அவுஸ்திரேலியாவுக்கு வர வில்லை. அப்போதே உடல் நிலை மிகச் சிறப்பாக இருக்கவில்லை என்று நினைக்கிறேன்.

கனடாவில் அவர் ரொறன்ரோ கல்விச் சபையின் பல்கலாசார ஆலோசகராகப் பணியாற்றிப் பலருக்கு உதவினார். அங்கு ஒரு தமிழ் நூலகத்தை நிறுவினார். அது இப்போது அவரது பெயரால் அழைக்கப்படு கிறது. மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கங்களின் சர்வதேச ஒருங் கிணைப்பாளராக இருந்து மகாஜனன் நூற்றாண்டு மலர் கனதியாக வெளிவர உதவினார்.

அவருடனான எனது கடைசி உரையாடல் இப்படி இருந்தது. "சேர்! எப்பிடிச் சுகமா இருக்கிறீர்களா?" சுகமாக இருக்கிறீங்களா என்று கேட்டால் பதில் சொல்றது கஸ்டம் கோகிலா. எத்தினை உறுப்புச் சரியா இயங்குவது எண்டு கேட்டீரெண்டால் எண்ணிப்போட்டுச் சொல்லிடுவன்" என்றார். அவர் மிக நகைச் சுவையாகப் பதில் அளித்தாலும் 'உண்மை' என்னை வருந்த வைத்தது.

நன்னூலார் சொன்னபடி. "நிலம், மலை நிறைகோன், மலர் நிகர் மாட்சி" கொண்ட அற்புதமான ஆசிரியராக அமைந்த "கனக்ஸ்" போன்ற மனிதர்களை இனிமேல் காண முடியாது.

"விலங்கியலைச் செப்பமுற
விளக்குவதில் இன்றுவரை
இலங்கையிலே இணையறியா
ஏற்றமிகும் ஆசிரியர்" *என்றும்*

**"பூரணமா கல்லூரி மகாசனாவின்புகழ் வளரக்**
**காரணருள் கனத்தவராம் கனக சபாபதி யிவரே"**

என்றும் கவிஞர் கந்தவனம் எழுதினார்.

"நடமாடும் பல்கலைக்கழகம், மகாஜனாவின் சரித்திரம், கல்வியில் ஒரு சகாப்தம், கற்றறிதலில் ஒரு சமுத்திரம்" என்று "ஜெயக்குமார்" எழுதினார்

ஆயிரக்கணக்கான மனிதர்களின் மகிழ்வுக்கும் உயர்வுக்கும் வழியாகி தன்னருஞ் செயல்களால் குன்றென நிமிர்ந்த அவர் "எம்மை வாழ வைத்தவர்" ஆக எம் மனங்களில் என்றும் நிலைத்திருப்பார்.

ஈவிரக்கம் இல்லாக் கொடிய யமன் எங்கள் ஆசிரியரைக் கொண்டு சென்றான். எட்டாத தூரம் எம் கண்கள் ஈரம் எவ்வாறிது ஆறும்? என் சொல்லித் தேறும்?


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# அறக்கொடை விழா - 07-01-2015




அறக்கொடை விழா
விருந்திர்கள்,
அந்தணர்கள்
ஊர்வலம் ஆரம்பம்



விழா அரங்கில்
தமிழக ஓதுவார்கள்
திருமுறை பாராயணம்




07-01-2015
சிவத்தமிழ்விருது
பெற்ற சான்றோர்கள்





வைத்திய நிபுணர்
த. பேரானந்தராசா
அவர்கள்



ரிஷி தொண்டுநாதன்
அவர்கள்




கல்வி நிதி பெறும்
மாணவி



வடமராட்சி
கல்வி வலயத்துக்கான
நிதி வழங்கல்



யாழ். போதனா
வைத்தியசாலைக்கான
அறக்கொடை வழங்கல்
பெறுபவர் -
வைத்திய நிபுணர்
த. பேரானந்தராஜா
அவர்கள்




தெல்லிப்பழை
புற்றுநோய்
வைத்தியசாலை
வைத்திய நிபுணர்
கிருஷாந்தி இராஜசூரியர்
அவர்கள்
உரையாற்றுகிறார்.


# துர்க்காதேவி வீட்டுத்திட்டத் திறப்பு விழா



தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.



கணக்காளர் S. பாலசிங்கம் (லண்டன்) அவர்கள் உரையாற்றுகிறார்.



இணைச் செயலாளர் திரு.மு.அருளையா அவர்கள் நன்றியுரை ஆற்றுகிறார்.




பிரதம விருந்தினர்
வைத்திய கலாநிதி
சே.ஆனந்தராசா
அவர்கள்
உரையாற்றுகிறார்.



தேவஸ்தான
உபதனாதிகாரி
திரு.சு.ஏழூர்நாயகம்
அவர்கள்
வரவேற்புரை
வழங்குகிறார்.




வலி.வடக்கு
பிரதேச செயலர்
க. ஸ்ரீமோகனன்
அவர்கள்
சிறப்பு
விருந்தினராகக்
கலந்து கொண்டு
உரையாற்றும்
காட்சி.




தேவஸ்தான
உப தலைவர்
திரு.ச.ஆறுமுகநாதன்
அவர்களை
கௌரவிக்கும்
காட்சி




துர்க்காபுரம்
மகளிர் இல்ல
அதிபர்
திருமதி. சி. அனந்தசயனன்
அவர்கள்
பாராட்டுரை
வழங்கினார்கள்.



யாழ்.வீடமைப்பு
அதிகாரசபை
உத்தியோகத்தர்
திருமதி.கிரிதரன்
அவர்கள்
ஆசிரியுரை
வழங்கினார்கள்.



சிறப்பு விருந்தினர்
வைத்திய நிபுணர்
சு. ரவிராஜ்
அவர்கள்
உரையாற்றுகிறார்




வலி.வடக்கு
பிரதேச சபை
தவிசாளர்
திரு.சோ.சுகிர்தன்
அவர்கள்
உரையாற்றுகிறார்



துர்க்காதேவி
வீட்டுத்திட்டத்தில்
அமைந்துள்ள
வீட்டின்
மாதிரித் தோற்றம்

அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ போதிநாத வேலன் சுவாமிகள்
துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு வருகைதந்து ஆசீர்வதித்தார்கள்





உ

# இதய அஞ்சலி

## புகழ்பூத்த வில்லிசைக் கலைஞர்
## கலா விநோதன் சி. கணபதிப்பிள்ளை அவர்களின்
## (சின்னமணி)
## பிரிவு குறித்து எமது இதய அஞ்சலியை
## சமர்ப்பிக்கின்றோம்



வில்லால் வித்துவத்தால்
சொல்லால் நவரசத்தால்
கலை வளர்த்த கலாவிநோதா
காலமுள்ளவரை நீ வாழ்வாய்
சிரிக்க வைத்து சிந்திக்க வைத்து
சிவத்தமிழ் விருது பெற்றாய்
விண்ணிலும் வாழ்வாய்
வணங்குகிறோம்.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

உ

# ஓர் உலகக் கலைஞன்

—கம்பவாரிதி இ.ஜெயராஜ்—




கலாபூஷணம் நா.கணபதிப்பிள்ளை

(சின்னமணி)

பிறப்பு : 30.03.1936 (பருத்தித்துறை, மாதனை)
இறப்பு : 04.02.2015 (அச்சுவேலி)

உலகக் கலைஞன் ஒருவன் மறைந்துவிட்டான்.
ஈழத்தமிழினத்தின் இன்னல் தொடர்கிறதோ?
முத்தமிழ்த் துறையில் முறைபோகிய ஓர் உத்தமக் கலைஞனை,
இழந்து இன்று இன்னலுறுகிறது ஈழத்தமிழினம்.
வில்லுக்கு விசயன்! இது பழைய செய்தி.
வில்லுக்குச் சின்னமணி! இது ஈழத்தமிழர் இயம்பும் புதிய செய்தி.
விசயனது வில் உடல்களைத் துளைத்தது!
சின்னமணியின் வில் அறிவைத் துளைத்தது!
கண்டோர் அஞ்சிய வில் அது!
காணத்தவம் இருந்த வில் இது!
மற்றோரை வீழ்த்தி வென்றது விசயன் வில்!
உயர்த்தி வென்றது சின்னமணியின் வில்!
வில்லிசைக்களத்தில்,
'கலைவாணர்' போன்ற பெருங்கலைஞர்களையும்,
தன் தனிப்பாணியால் வென்று புகழ் கொண்ட வீரர் இவர்.
கலை, கருத்து, நகை எனும் மூன்றும் கலந்து,
சின்னமணி தந்த முக்கூட்டு மாத்திரையை,
யாழ் முழுதும் விரும்பி உண்டது!
அவர் பக்கமாய்த் திரும்பி நின்றது!
நரை விழுந்து நடக்க முடியாத கிழவியும்,
இவர் முகம் காணக் காதலோடு காத்திருந்த காலமது.
சின்னமணியின் நேரம் கேட்ட பின்பே,
ஆலயங்களில் வீதி வலம் வர சிவனுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டது.
பெயரில் சின்னமணி! புகழில் பெரியமணி!
தன் வியத்தகு கலை ஆற்றலால்,
கம்பன் கழகத்தை வளர்க்க உதவிய பெரியோன்.
கண்ணுக்குள் நிற்கும் கறுப்புக்கட்டழகன்.
எங்கள் இசைநாடக மேடைகளில் இவர் ஏற,
வெறுக்கும் யமனை சபை விரும்பத் தொடங்கியது.
வில்லிசையைப் பொறுத்தவரை,
சின்னமணிக்கு நிகரான ஒரு கலைஞன்,
உலகில் இல்லை.
இவரால் தலை நிமிர்ந்த யாழ் மண்,
இன்று இவரையே உள் வாங்கித் தன் தாகம் தீர்த்தது.
இயற்கை உணர்ந்து இழப்பைச் சகிப்பதைத் தவிர வேறு வழி என்ன?
இழப்பை ஏற்று நம் ஆத்மா சாந்தியுறுவதாக!
சின்னமணியானாலும் இந்த மணியின் நாதம்,
இன்னும் பலகாலம் தமிழர் இதயங்களில் நிலைத்து நிற்கும்.
**'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'**



# சிறுவர் விருந்து

# பெரியக்காள் என்றொரு பெண் துறவி

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

*அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து*

புதிய வகுப்பில் நன்றாகப் படிக்கிறீர்களா? நன்கு விளையாடுகிறீர்களா? நல்லது... அதேவேளை; புதிது புதிதாக நல்லவற்றையும் கற்றுக்கொள்ளுங்கள். இன்று ஒரு இளம் பெண் துறவி பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

தென் தமிழகத்தில் திருச்சிராப் பள்ளிக்கருகே ஒரு சிறு கிராமத்தில் பிறந்தவர் பெரியக்காள். பெரியக்காள் ஆசாரசீலம்மிக்க பிராமணக் குடும்பத்தில் மகளாகப் பிறந்தவர். பால்ய வயதில் வயது கூடிய ஒரு பிராமணருக்கு அக்கால வழக்கப்படி திருமணம் செய்தனர். சிறுமியான பெரியக்காள் பெற்றோருடனேயே வசித்து வந்தார். அவர் பருவ வயது அடையும் முன்னே அவரை மணந்த பிராமணர் இறந்து விட்டார்.

சிறுமியான பெரியக்காளுக்கு அக்கால முறைப்படி மொட்டை அடித்து, வெள்ளைச் சிற்றாடையும் உடுத்தி விட்டனர். வீட்டிலும் வெளியிலும் அவர் எந்த நல்ல நிகழ்விலும் கலந்து கொள்ள முடியாது. பிறர் எதிரில் உலவக்கூடாது. இப்படிப் பல சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட இந்தச் சிறுமி தன் பொழுதை, தந்தையாரிடம் கல்வி கற்றுக் கொள்வதிலும், நல்ல ஆன்மீக நூல்களை ஆழ்ந்து கற்பதிலும் ஈடுபட்டார். கள்ளம் கபடம் இல்லாத அவர் உள்ளத்தில் கடவுள் சிந்தனை ஆழமாகப் பதிந்தது. இறைவனைப் பிரார்த்திப்பது, திருத்தொண்டர் மகிமையைச் சிந்திப்பது, வீட்டில் அமைதியாகப் பணிபுரிவது ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த பெரியக்காளின் ஆழ்மனம் "தான் நல்லதொரு குருவைக் கண்டு, உபதேசம் பெற்றுத் துறவு பூண்டு, இறைவனுக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும்" என்று சதா சிந்தித்தது.

அவரது நல்வினைப் பயனாக உத்தம ஞானியான ஸ்ரீதர ஐயாவாள் என்று அழைக்கப்பட்ட இல்லற ஞானி ஒருவர் பிச்சை எடுப்பதற்காகப் பெரியக்காள் வசித்த ஊருக்கு வந்தார். அவரது பெருமையை நன்று அறிந்து கொண்டிருந்த அவ்வூர்ப் பிராமணர், பெரியோர் தங்கள் ஊரில் சிலநாள் தங்கி ஊர்மக்களுக்கு நன்னெறிகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஸ்ரீதர ஐயாவைக் கேட்டுக் கொண்டனர். அவரும் சம்மதித்து அங்குள்ள கோயில் மடத்தில் தங்கினார்.

பெரியக்காள் ஐயாவின் உபதேசங்களைக் கேட்கப் பெற்றோருடன் சென்றார். இவரே தனக்கு உபதேசம்

செய்யச் சிறந்த குரு என்று எண்ணினார். ஐயாவின் பாதம் பணிந்து தன் விருப் பத்தைக் கூறினார். ஞானநோக்குடைய ஸ்ரீதரஐயாவாள் அவர்களும்பெரியக்காள் பெற்றிருந்த ஆன்ம பக்குவ நிலையை உணர்ந்தார். அந்த ஊரை விட்டுப் புறப்படுமுன் பெரியக்காளுக்கு ஞான உபதேசம் செய்து, மந்திர தீட்சையும் கொடுத்து விட்டுச் சென்றார்.

பெரியக்காள் குருமொழியை நன்கு சிந்தித்து நிட்டைகூடி நல்ல ஆன்மீக உணர்வில் திளைத்தார். ஊரார் அவரின் உயர்நிலை அறியாது சின்னஞ்சிறு கதைகள் பேசித் தமக்குள் விமரிசனம் செய்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் காவிரி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது திடீரென வெள்ளம் வந்துவிட்டது. நீராடிக் கொண்டிருந்த பலரும் அலறி அடித்துக் கொண்டு தட்டுத்தடுமாறிக் கரையை அடைந்தனர். ஆனால்; பெரியக்காளோ இறைவன் நினைவில் மெய்மறந்து மரம்போல் நடு ஆற்றில் நின்றார். எல்லோரும் செய்வ தறியாது கூச்சலிட்டனர்.

பெரியக்காளை நெருங்கிவந்த காவிரி வெள்ளம் திடீரென இரண்டாகப் பிளந்து அவருடைய இருபக்கமாகவும் ஓடியது. அவர் நன்கு முழுகி எழுந்து நிதானமாகக் கரை ஏறினார். இதை நேரில் தம் கண்ணால் கண்ட ஊர் மக்கள் அவரது பெருமையை உணர்ந் தனர். அவரை மதித்துப் போற்றினர். பலர் அவருக்குப் பணி செய்ய முன் வந்தனர்.

ஏற்கனவே தாய் தந்தையர் இறந்து விட்டதால் தனியாக வசித்த பெரி யக்காள் தமது வீட்டையே ஒரு தபோவனமாகச் செய்திருந்தார். ஊர் மக்களும், பிள்ளைகளும் அவருடன் தங்கி பஜனை, வழிபாடுகளில் கலந்து கொள்ள ஆர்வம் காட்டினர். ஒருமுறை அவரும், மற்றும் சிலரும் திருக்குற்றால நாதரைத் தரிசிக்கச் சென்றனர். குற்றால அருவியில் நீராடி, ஆலய தரிசனம் செய்தனர். ஓரிடத்தில் அமர்ந்து, கட்டுச் சாதத்தைச் சாப்பிட்டு ஓய்வாக இருந்தார்கள்.

அப்போது; சற்றுத் தூரம் மலை மேல் ஏறிப் பார்த்து வருவதாகக் கூறிய பெரியக்காள் மலைச்சரிவில் ஏறிச் சென்றார். அவரது கட்டளைப்படி மற்றவர்கள் கீழேயே இருந்தனர். நெடு நேரமாகியும் பெரியக்காள் திரும்பி வரவில்லை. மற்றவர்கள் தேடினர்... தேடினர்....

ஆனால் அவரை எங்குமே கண்டு பிடிக்க முடியவில்லை. நீண்ட நாட்கள் குற்றாலத்திலேயே தங்கியிருக்க முடியாமல் இரண்டொரு நாளில் எல்லோரும் ஊர் திரும்பினர். ஆனால்; பெரியக்காள் என்றுமே திரும்பி வரவில்லை. யாரும், எங்கும் அவரைக் காணவே இல்லை.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**மானிப்பாய் மருதடிப் பிள்ளையாரின் கும்பாபிஷேகம்**

மிகப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் 02-02-2015 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. ஜெயக்குமாரக் குருக்களின் ஆற்றுப்படுத்தலில் பலநூறு சிவாச்சாரியார்கள் பங்குபற்றினர். இவ்வாண்டு முதல் 25 நாட்கள் திருவிழா நடைபெற அறங்காவலர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

**கந்தரோடை வற்றாக்கை அம்மன் கும்பாபிஷேகம்**

விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமிகள் வீற்றிருக்கும் கந்தரோடை வற்றாக்கை திருக்கோவில் கும்பாபிஷேகம் 09-02-2015 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

**கோப்பாய் நாவலம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம்**

கோப்பாய் மத்தி அருள்மிகு முத்துமாரி அம்பாளின் கும்பாபிஷேகம் 09-02-2015 அன்று சிவஸ்ரீ. கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

**காரைநகர் கும்பநாயகி மணற்காட்டு அம்மன் கும்பாபிஷேகம்**

02-02-2015 அன்று காரைநகர் மணற்காட்டு அம்மனின் மகா கும்பாபிஷேகம் மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.

**கீரிமலை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மகா கும்பாபிஷேகம்**

போரில்மிகவும் பாதிக்கப்பட்ட கீரிமலை முத்துமாரி அம்மனின் மகா கும்பாபிஷேகம் 01-02-2015 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம குருவாக ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ நகுலநவராஜ உமாபதீஸ்வரக் குருக்கள் ஆற்றுப்படுத்தினார்.

**தெல்லிப்பழை விராங்குடை வயிரவர் கும்பாபிஷேகம்**

தெல்லிப்பழை பழமைமிக்க வயிரவப் பெருமானின் கும்பாபிஷேகம் 08-02-2015 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

**கீரிமலை நகுலேஸ்வரம் பெருந்திருவிழா**

சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சவம் 04-02-2015 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

**யாழ். வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள்**

மஹோற்சவ விஞ்ஞாபனம் 24-02-2015 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04-02-2015 தேர்த்திருவிழா நடைபெறும்.

**யாழ். வண்ணை வேம்படிப் பிள்ளையார் மஹோற்சவம்**

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவிலாகிய வேம்படிப் பிள்ளையாரின் மஹோற்சவம் 18-02-2015 ஆரம்பம்.

**அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் யாழ் வருகை**

அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் போதிநாத வேலன் சுவாமிகள் 28-01-2015 முதல் ஒரு வாரம் யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு சமய தலங்களுக்கும் நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தார். பெருந்தொகையான பக்தர்கள் அவரிடம் ஆசி பெற்றனர். சுவாமிகளுடன் ஸ்ரீ சண்முகநாதன் சுவாமிகளும் வருகை தந்தமை குறிப் பிடத்தக்கது.

**கீரிமலை காசி விஸ்வநாதர் கோவில்**

மேற்படி கோயிலின் கும்பாபிஷேகம் 05-03-2015 அன்று மாவை ஆதீன முதல்வர் மகாராஜ ஸ்ரீ ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் நடைபெற வுள்ளது. காஜத்திரி சித்தரின் ஏற்பாட்டில் 108 நர்மதா லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. ஆலயம் புதிய வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**சிதம்பரம் கும்பாபிஷேகம்**

இந்தியா தில்லைச் சிதம்பரம் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக 01-05-2015 அன்று நடைபெறவுள்ளது. நீண்ட இடை வெளிக்குப் பின் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாசிமக இலட்சார்ச்சனை**

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாசிமக இலட்சார்ச் சனை 22-02-2015 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 03-03-2015 செவ்வாய்க் கிழமை பூர்த்தியடையும்.

மாசிமகப் பெருவிழா 04-03-2015 புதன்கிழமை சிறப்பாக நடைபெறும்.

**முன்னேஸ்வரம் சிவன் கொடியேற்றம்**

வரலாற்றுத் திருத்தலமாகிய சிலாபம் முன்னேஸ்வரம் 23-2-2015 கொடியேறி 04-03-15 தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

**செல்லப்பா சுவாமிகளின் நூறாவது குருபூசை**

எதிர்வரும் 22-03-2015 அன்று நல்லூர் செல்லப்பா சுவாமிகள் சமாதியில் விசேட அபிஷேகம் நடைபெற்று, சுவாமிகளின் புதிய ஐம்பொன் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் சுவாமிகளின் சிறப்புக்குறித்த மலர் வெளியீடும் அன்னதானமும் நடை பெறவுள்ளது.

**யோகசுவாமிகள் 51வது குருபூசை**

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் 30-03-2015 சுவாமிகளின் 51வது குருபூசை சிறப்பாக நடைபெற வுள்ளது.


**மருதனார்மடம் பல்லப்பவயிரவர் திருப்பணி**

மருதனார்மடம் அருள்மிகு பல்லப்ப வயிரவரின் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஆனி மாதமளவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.


**கீரிமலையில் நல்லைநகர் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை**

நாவலர் நற்பணி மன்றத்தினர் வலி வடக்கு பிரதேச சபையின் ஆதரவில் கீரிமலையில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை அமைக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

# துர்க்காதேவி வீட்டுத்திட்ட திறப்பு விழா




வைத்திய கலாநிதி சு. ரவிராஜ் அவர்கள் இல்லத்தைத்
திறந்து வைக்கும் காட்சி



வீடமைப்பு அதிகாரசபை சிரேஷ்ட உத்தியோகத்தர்
திருமதி. கிரிதரன் அவர்கள்



வலி வடக்கு பிரதேச செயலர் திரு. க. ஸ்ரீமோகனன் அவர்கள்
இல்லத்தைத் திறந்து வைத்தார்.





துர்க்காதேவியின் மணவாளக்கோல திருவிழாவில்
விநாயகர், அம்பாள், முருகன் பூந்தண்டிகையில்
வெளிவீதி உலாவரும் காட்சி

PRINT Master T.P. 021-205 3322